உ

# திருவானைக்காத் தல வரலாறு

"கலைவாணன்"

க. அப்புலிங்கம்

கோயில் வெளியீடு

K. N. சொர்ணம், நிர்வாக அதிகாரி.

விலை 2—00

Rs. 1.00

# திருநீற்றுத் திருமதிற் படலம்.

கவிராட்சஸ கச்சியப்ப முனிவர் அருளிய திருவானைக்காப் புராணத்தில் திருநீற்றுத் திருமதிற் படலத்திலுள்ள திருமதில் பிரதட்சிண பலன் பற்றிய செய்யுட்கள்:

சித்தெலாம் உடைய தம்மால்
　　தீகழ்தரு பொருள்கள் எல்லாம்
பைத்த நானிலத்தீர்! இந்தப்
　　பரந்த மாமதிலில் ஆக
வைத்தனம், ஆதலாலே
　　வரங்களை வேட்டோர் எல்லாம்
மெத்திய அன்பால் இந்த
　　வியன் மதில் சூழ்க என்ருன். 1

அன்று தொட்டு அவனியுள்ளோர்
　　அருமகப் பெறு வேட்டும்
வென்றியை விழைந்தும் மாரு
　　வெறுக்கையை விழைந்தும் இன்ப
நன்றியை விழைந்தும் சால
　　நாட்டினை விழைந்தும் இவ்வா (று)
ஒன்றிய மதில் சூழ் போந்திட் (டு)
　　உலப்பிலா வரம்கொள்கின்ருர். 2

மதிலினைச் சூழ்வாம் என்று
மனையகம் தன்னை நீங்கில்
பொதி தருபாவ மாதிப்
புல்வினை அவனை நீங்கும்
எதிர் கொள்இன் வரங்க ளெல்லாம்
எதிர் கொளும், கதுவின் ஞானம்
கதுவும் சூழில் சூழும்
கரிசறு முத்தி நல்கும். 3

வலம்புரி கின்றார் மெல்ல
வைக்கும்ஓர் அடிக்குக் கோடி
நலம்புரி பரி மேதங்கள்
நவையுறப் புரிந்த பேரும்
சிலம்பு உறழ் மதிலை அந்தோ!
சிறிது அவமதித்தா ரேனும்
குலம்புரி சுற்றத்தோடும்
கொடு நரகு உழப்பர் என்றும்; 4

தடநெடு மதிலை ஓர்கால்
தம் இயல்பாலே சூழில்
மடவர்களேனும் பாவ
வல்வினை முழுதும் தீர்ந்து
கடவுளராவ ரென்னில்
கரிசு அறு முனிவீர்! அந்த
விடவிய மதிலின் மேன்மை
யாவரே விளம்பும் நீரார்? 5

௨

# அம்பிகை பூசித்தது

ஆதியில் மனிதன் தன்னைப் படைத்து வாழ்வளித்த பரம்பொருளை நேரிலே கண்டு நன்றி செலுத்த எண்ணினான். அறிவுக்கண் கொண்டு அந்த ஆண்டவனைத் துருவித் துருவி ஆராய்ந்தான். கடவுளும் அவன் ஆராய்ச்சிக் கரங்களுக்கு அகப்படாமல் கண்ணும்பூச்சி விளையாடிக்கொண்டிருந்தான். கடைசியாக மனிதனின் பகுத்தறிவுக் கண்கள் பரமனை நேரே சந்திக்க முடியாவிட்டாலும் அவனது எல்லையற்ற சக்திகளின் வழியே கடவுளைக் கண்டுகொள்ள முடிந்தது. செந்தழலிலே அவன் சீற்றம் தெரிந்தது. மண்ணிலே பொறுமை விளங்கியது. நீரிடையே அவன் மன ஈரம் காணக்கிடைத்தது. காற்றினிலே மென்மை விளங்கியது. வெளி, தூய்மையைக் காட்டியது. தான் கண்டுகொண்ட இந்த ஐந்தின் வழியே அவன் ஆண்டவனை வழிபடத் தொடங்கிவிட்டான். சுருக்கமாகச் சொன்னால் பஞ்ச பூதத் தலங்களின் வரலாறே இதுதான்.

"நீரின்றமையாது உலகு" என்று தண்ணீரின் பெருமை தமிழ் வேதத்தில் பேசப்படுகிறது. செழுநீர்த்திரளாகப் பொன்னித் தண்ணீரைத் திருக்கரத்தால் திரட்டி எடுத்துச் சிவலிங்கமாக்கித் தான் பூசித்ததுமன்றி அகில உலகமும் ஆராதிக்க உதவினாள் ஆதிசக்தியான அகிலாண்டநாயகி என்று தத்துவக் கதை கூறுகிறது புராணம்.

மனித வாழ்வுக்குக் காற்றுக்கு அடுத்தபடியாக மிக மிக முக்கியத் தேவையான தண்ணீரைச் சிவமாய்க் கண்ட தமிழன் அதை வணங்கத் தக்க இடமாக மருத மண்ணில், பொன்னியாற்றங் கரையை - நாவற்காட்டைத் தேர்ந்து எடுத்தது குறிப்பிடத்தக்க சிறப்புடையது.

அகண்ட காவேரியாக வரும் செந்தமிழ்ப் பொன்னியாறு இரண்டாகப் பிரிந்து சற்றே நடந்து மீண்டும் இணைவதால் ஏற்பட்ட ஆற்றிடைத் திட்டு தான் வளங்கொழிக்கும் திருவானைக்கா. நாவல் மரங்கள் மிகுந்த பெருஞ்சோலை அது. எங்கெங்கும் அமைதியும், குளிர்ச்சியும், இனிமையும் செறிந்த புனித பூமியான ஜம்பு வனத்தைத்தான் சிவபூஜை செய்ய ஏற்ற இடமாக அகிலாம்பிகை தேர்ந்தெடுத்துக் கொண்டுவிட்டாள். அனாதி காலத்திலே ஆரம்பித்த அந்தப் புண்ணிய பூசை இன்றும் நடைபெறுகிறது. ஏன்! என்றென்றும் குறைவற நடந்துகொண்டே இருக்கும். இன்றும் உச்சிக்காலப் பூசையை நடத்தவரும் கோயில் பூசகர் அகிலாண்டநாயகி கோயிலிலிருந்து அம்மனின் வேடந்தாங்கி கிரீடமும், உருத்திராக்கமும் புனைந்து, புடவை உடுத்தி, பூவும் நீரும் கையில் ஏந்திக் கொட்டுமேளத்தோடு மூன்றும் பிரகாரத்தைவலம்வந்து ஆனைக்கா அண்ணலின் கோயிலினுட் புகுந்து பராசக்தியாகவே தன்னைப் பாவித்துக் கொண்டு செய்யும் சிவபூசையைக் காணப் பதினாயிரம் கண்களல்லவா வேண்டும்! வேறு எந்தத் தலத்திலும் இது போன்ற காட்சி காணக் கிடைக்காது. பார்ப்பவர் நெஞ்சில் பரவசமூட்டும் இந்த நிகழ்ச்சியைப் பற்றியதோர் அழகான புராணக் கதையுண்டு.

அனாதி காலத்தில் ஒரு சமயம் உயிர்க்குலம் தமது நெறி தவறி நடந்துகொண்டது. அதனால் உலக வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டது. தருமம் குன்றியபோது அதைத்தாங்கி நிலை நிறுத்துவதே தமது கடமையாகக் கொண்ட சிவபெருமான் அகிலத்து நிலையைத் திருத்தக் கருதி, தான்

யோகத்தமர்ந்தார். பக்கத்திலேயே தன்னை வைத்துக் கொண்டு யோகத்தமர்ந்த பரமனைக் காண அம்பிகை சற்றே எள்ளி நகைத்தாள். அகில லோக நாயகியானலும் அறியாமை கலந்த அலட்சியத்தால் மலர்ந்த அந்த ஏளனச் சிரிப்பை ஆண்டவன் கண்டிக்க விரும்பினன். அம்மையைக் கைலையிலிருந்து காசினிக்குப் போகக் கட்டளை இட்டான். அத்துடன் அவனியில் அறிவுச் சுடர் காந்தும் ஞானத் தலத்தில் சென்றிருந்து சிவபூசை செய்ய ஆணையிட்டான். அங்கு தானும் வந்து தங்கிச் சிவஞான உபதேசம் செய்து அருளுவதாகவும் வாக்களித்தான்.

ஆண்டவன் கட்டளைப்படி ஆதி சக்தியான அகிலாண்ட வல்லியும் அவனிக்கு இறங்கி வந்தாள். அருந்தவம் புரிய ஏற்ற இடத்தைத் தேடி அலைந்து கடைசியாகக் காவிரிக் கரையின் நாவற் காட்டைத் தேர்ந்தெடுத்தாள்.

தூய்மையான பொன்னியாற்றுத் தண்ணீரைத் தன் தெய்வத் திருக்கரங்களால் திரட்டி உருட்டிய தேவியின் பக்திப் பரவசங் கண்ட பரமன் அப்புலிங்கமாக அவள் முன் அமைந்தான். இதை மனக்கண்ணல் கண்டு ரசிக்கப் பின் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் வந்த அப்பர் பெருமான் "தென் ஆனைக் காவானைத் தேனைப் பாலைச் செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே" என்று பரவசமாகப் பாடுகிருர்.

அம்மையின் அருந்தவங்கண்ட அண்ணல் அவனிக்கு இறங்கி அவளெதிரில் வந்து காட்சி கொடுத்தான். விடை ஏறிவந்த விமலனைக்கண்டு பரவசப்பட்டுத்தொழுது, வணங்கி நின்ற உலகமாதாவாகிய அகிலாண்டநாயகியை அருட்கண் கொண்டு நோக்கிய சிவபெருமான் "உனக்கு வேண்டுவது யாது?" என்று வினவினன். தேவியும் தனது மனத்தில் குழம்பிய வேதாந்த சித்தாந்த ஐயப்பாடுகள்

பலவற்றையும் கூறி விளக்கம் வேண்டினள். ஞானமூர்த்தியான பரமேச்வரன் அம்மையின் அருட்தாகம் தீரத் தத்துவ ஞானத்தின் சாரமான சைவ சித்தாந்த உண்மைகளை எல்லாம் தெளிவாக எடுத்துக் கூறி விளக்கினன். அன்று அகிலாண்ட நாயகிக்காக அருளப்பெற்ற மெய்ஞ்ஞானத் தெளிவு அவள் மட்டுமன்றி அப்போது அருகில் இருந்த நந்தி எம்பெருமானுக்கும், நிழலளித்த ஜம்பு மாதவனுக்கும் கிடைத்தது. உமையவளோடு உடனிருந்த அருளாளர்கள் இருவரும் சிவஞானம் பெற்றுவிட்டார்கள். சிவபெருமான் குருநாதனுக இருந்து உபதேசித்ததாலும், அம்பிகை மாணவியாக மற்றுமிரு மாணுக்கர்களான நந்தி, ஜம்புமுனி என்பவர்களோடு சைவ சித்தாந்தப் பாடம் கேட்ட புனிதம் பெற்றதாலும் இவ்வூர் "ஞானபூமி" என்று பெயர் பெற்றது.

ஞானம் முடிவற்றது; என்றென்றும் வளர்ந்துகொண்டே இருப்பது. அறிவுத் தாகம் கொண்ட உயிர் என்றென்றும் பயின்றுகொண்டேதான் இருக்கும். முடிவில்லாத ஞானத்தை உபதேசிப்பதால் இங்குள்ள இறைவர் ஞானகுரு எனப் போற்றப்படுகிறுர். எல்லை இல்லாத கல்வியை இடைவிடாது பயின்றுகொண்டிருக்கும் தேவியும் இங்கு இன்னும் திருமணம் முடிக்காத மாணவியாகவே, கன்னியாகக் காட்சி கொடுக்கிருள். இங்கு மற்ற கோயில்களில் உள்ளது போலத் திருக்கல்யாணத் திருவிழா இல்லாததன் உண்மை இதுதான்.

சீவராசிகளின் உயிர் வாழ்வுக்கு இன்றியமையாதது எனப்படுவதில் உணவுக்கு அடுத்தபடி உள்ளது தண்ணீரே யன்ருே? மண்ணுலக மானுடருக்கு விண்ணுலகம் அளிக்கும் தேவாமிர்தம் தண்ணீரே என்று வேதங்கள் சிறப்பித்துப் பாடும். எனவே அமுதமான தண்ணீரே உருவாக அமைந்த ஆண்டவனை அறிஞர்கள் அப்புலிங்கம் என்பதன்றி அமுதலிங்கம் எனவும் பெயரிட்டு வணங்கினர்கள். நாளடைவில் பூசிக்கவோ, திருமுழுக்காட்டவோ ஏனைய அலங்காரங்

ஆளைச் செய்து வணங்கவோ ஜல ரூபத்தில் உள்ள திருவுரு உலகவர் பூசிக்க வசதிக் குறைவாக இருந்ததால் அழகியதொரு சிவலிங்கம் அமைக்கப்பட்டது. அதுவே நாம் வணங்கும் ஜம்புலிங்கம், அமுதலிங்கம், அப்புலிங்கம் என்பதெல்லாம். கருவறையில் இடைவிடாது ஊற்றெடுத்து வளரும் புனிதப் புனல் "ஸ்ரீமத் தீர்த்தம்" எனப் பெயர் பெற்றது.

ஆனைக்கா அண்ணலின் திருக்கோயிலில் சுவாமி சன்னதி மேற்கு நோக்கியது. மிகச் சிறிய கருவறையில் பெருமான் கொலு வீற்றிருக்கிறார். மகாமண்டபத்திலிருந்து தெரிசிப்பதே சிறப்பு. பெருமானை மற்ற கோயில்களிலுள்ளது போலன்றி இங்கு ஒரு ஜன்னல் வழியாகத் தான் தெரிசிக்க முடியும். அந்த ஜன்னலுக்கு 9 துவாரங்கள் உள்ளன. அதன் வழியாகத் தெரிசித்தால் சிவதரிசன பலன் மட்டுமின்றி இத்தலத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களான ஒன்பதிலும் திருமுழுக்கிட்ட சிவ புண்ணியமும் சேரும் என்று புராணம் பேசுகிறது.

இரண்டாகப் பிரிந்த அகண்ட காவேரி செந்தமிழ்ப் பொன்னியாறு எனவும் கொள்ளிடம் எனவும் புண்ணியப் பூம்புனல் சொரிவதன்றி இத்தலத்துக்கே உரிய தீர்த்தங்கள் 9 உள்ளன என்பதை இங்குத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். எம்பெருமான் திருவோலக்கம் கொண்டிருக்கும் கருப்பக்கிரகத்தில் ஊற்றெடுத்துப் பெருகும் புனிதமான ஸ்ரீமத் தீர்த்தம் பற்றிய குறிப்பை முன்பே கண்டோம். மிகப் பெரிய அழகான திருக்குளமாகத் தைபூசத் தெப்பத் திருவிழா கொண்டாடப்படும் சிறப்புடைய ராம தீர்த்தம், திருவரங்கம் திருக்கோயிலிலிருக்கும் சந்திரபுஷ்கரணி என்னும் பெயரிய சந்திர தீர்த்தம், சுவாமி சன்னதியின் மூன்றும் திருச்சுற்றில் தென்கிழக்கிலுள்ள கிணறாகிய அக்கினி தீர்த்தம், ஊஞ்சல் மண்டபத்தின் எதிரிலுள்ள இந்திர தீர்த்தம், சிறு கிணறான அகத்திய தீர்த்தம், சங்கமேச்வரர் கோயிலருகிலுள்ள ஜம்பு தீர்த்தம் என்பவை ஏனைய எட்டுமாகும்.

இதற்கிடையே சம்புமாதவன் (ஜம்பு மகா முனிவர்) அருந்தவம் புரிய அமைதியான இடத்தைத் தேடி அலைந்து முடிவாகக் காவிரிக்கரையிலிருக்கும் நாவல் காட்டின் இனிமையைக் கண்டு வந்து அங்கிருந்ததோர் வெண்ணாவல் மரத்தடியில் தங்கி இருந்து தவமியற்றினான். மனம் குவிந்து தவமியற்றும் அம்மாதவனின் மடியில் மரத்திலிருந்து ஓர் அதிசயமான வெண்ணாவற் பழம் விழுந்தது. எதிர்பாராமல் கிடைத்த அக்கனியை ஆண்டவன் தந்த அருட் கொடையாகக் கருதிய முனிவன் அதை அவனுக்கே நிவேதிப்பது என மனங்கொண்டான். கனியைக் கரத்திலேந்திக் கைலையை நோக்கி நடந்தான்.

## நாவல் மரம் எழுந்தது

நந்தி, பிருங்கி முதலிய கண நாதர்களோடு கந்த சண்டகணதீசர்கள் புடை சூழ உமையொருபாகன் சிவபுரத்தில் கொலு வீற்றிருக்கும் நல்ல நேரத்தில் சம்புமாதவன் கைலையை அடைந்து ஆண்டவன் திருவடியில் தான் கொணர்ந்த அற்புத வெண்ணவற் கனியை நிவேதனம் செய்தான். அடியார்கள் அன்போடு அளிக்கும் எதையும் அமுதினும் மேலாகக் கருதும் எம்பெருமான் கனியைக் கரத்தில் வாங்கி உவகையோடு சுவைத்து அதன் கொட்டையை உமிழ்ந்தார். உமிழும் கொட்டையை சிவப்பிரசாதமாக அருகில் நின்றிருந்த அந்த சம்பு மாதவனே ஏற்று வாயிலிட்டு விழுங்கிவிட்டான்.

அற்புதக் கனியின் கொட்டை! அதுவும் ஆண்டவனல் சுவைத்துமிழப்பட்ட புனிதம் வாய்ந்தது! விந்தையான அவ் விதை விபரீதம் விளைப்பது இயல்புதானே! விழுங்கிய முனிவனின் வயிற்றில் அது முளைவிட்டு எழுந்தது. அவன் முடியைப் பிளந்து கொண்டு பெரியதொரு நாவல் மரமே முளைத்து செழித்து வளர ஆரம்பித்துவிட்டது! கற்பனைக் கெட்டாத அற்புதம் பல விளைவிக்கும் எல்லாம் வல்ல சித்தனை சிவபெருமானின் பெருங்கருணை தன்மீது கொண்ட விநோதமான நிலையைக் கண்ட சம்பு மாதவன் "நன்றே செய்வாய், பிழை செய்வாய்? நானே இதற்கு நாயகமே?" என்று கூறி எம்பெருமான் திருவடியில் விழுந்து பணிந்தான். தன்னை விட்டுப் பிரிய மனமில்லாத தவ முனிவன் பக்திப் பெருக்கை உணர்ந்த ஞான நாயகன் நீ "தாரணியில்

தண்டமிழ் வழங்கும் தென்னகத்தில் பாரத மண்ணைப் புனித மாக்கப் பாய்ந்தோடும் பொன்னியாற்றங்கரையில் அன்னை ஆதிபராசக்தி ஞானம் பெற மோனத்தவமியற்றும் நாவற் காட்டில் போய் இரு. நான் 'செழுநீர்த் திரளுருவாய்' சிவலிங்கமாக நின் அடிநிழலில் தங்கி இருந்து அருள் புரிவேன்'' என்று அன்புக்கட்டளையிட்டு அனுப்பினான். அதன்படி ஜம்புமாதவன், காவேரி பாயும் புண்ணிய மண்ணிலே அற்புதமான சிவபூசை செய்யும் அகிலாண்ட நாயகியின் இஷ்டலிங்கமாக அமர்ந்துவிட்ட அப்புலிங்கத் திற்கு இயற்கைத் தாய் அமைத்த எழில் ஆலயமாக வந்து அமர்ந்து விட்டான். அன்று தொட்டுக் கற்பகோடிக் காலமாக எம்பெருமானின் சிவலிங்கத் திருமேனிக்குத் தனது கிளைக் கைகளை நீட்டி நிழலளித்து வருகிறான். கருவறையை ஒட்டி வானோங்கி வளர்ந்து பூவும், பிஞ்சும், காயும், கனியும் குலுங்கும் பசியதொரு தெய்வீகமான நாவல் மரத்தை இன்னமும் நாம் தெரிசித்து மகிழலாம். எத்தனை எத்தனையோ வருடங்களாக எழில் குன்றாமல் இருக்கும் அம்மரத்தின் மாண்பால் அவ்விடமே ஜம்புகேஸ்வரம் என்று பெயர் பெற்றுவிட்டது. அதனடியில் உள்ள எம்பெருமானும் ஜம்பு லிங்கமாயினான். பக்தி பெற்ற பரிசன்றோ இது?

# பிரமன் அருள்பெற்றது

[ பஞ்சப்பிரகார தத்துவம் ]

உலகத்து உயிர்க்குலம் அனைத்தையும் படைப்பவன் பிரமன். அணு முதல் யானைவரை உள்ள ஜீவராசிகளும் அவனால் உண்டாவன. ஆனால் அவனையும் உயிர்க்குலத்துள் ஒருவனாகவே சைவ நன்னூல்கள் பேசும். அனைத்துக்கும் மேலான பரமசிவத்தின் ஆணைப்படி இயங்கும் ஒரு சீவன் என்பதே சிவநெறி.

எவ்வளவுதான் மேம்பட்டவராயினும் அவர் தம்மனத்தில் அகந்தையும், செருக்கும் முளைத்து விட்டால் அன்னாரின் வீழ்ச்சித் துவக்கம் அதுதான்என்பது அறநெறி. அதன் வழி பிரமனும் ஆணவத்தின் பால்பட்டு அழிந்தது ஒரு சுவையான நிகழ்ச்சி.

விந்தையானபலஉயிர்களையும் கணந்தோறும்படைத்துக் கொண்டிருக்கும் அந்த ஆக்கற் கடவுள் தனது செயல்திறமையைச் சிந்தித்துப் பார்த்தான். பெருமிதம் பூத்த நெஞ்சம் ஆணவம் என்ற கொடிய விஷத்தின் வயப்பட்டது. இடையே தனது திறமையனைத்தையும் திரட்டி உருட்டியொரு மோகனாங்கியைப் படைத்தான். படைத்த படைப்பினைக் கடைக்கண்ணால் கண்டான். வனப்பெலாம் திரண்டெழுந்த வாலையைக் காண வயமிழந்தான். புனிதமான படைப்புத்

தொழில் செய்யும் பிரமன் புத்தி கெட்டதால் அவன் ஆக்கம் அதுமுதல் குறையுற்றது. உலக வாழ்வு சீர் கெட்டது. உயிர்கள் நெறி குலைந்தன. உள்ளனவெல்லாம் பாழாகத் தரணியின் இயக்கம் தடைப்பட்டது. ஆக்கும் தேவன் தன் அவலம் அறிந்தான். கறைபட்ட கைத்தொழில் குறைபட்டது என்பதை ஓர்ந்தான்; மனம் பதறினன்; மனிதர்கள் பாவத்தைத் தேவர்கள் மன்னிப்பார்கள். தேவனே பாவியானல், தேவதேவனை பரமேச்வரனிடம் தானே முறையிட வேண்டும்!

கழுவாய் தேடிய பிரமதேவன் கண்கண்ட சிவத்தலத்தை எல்லாம் தரிசித்துக் கொண்டு மன அமைதியில்லாமல் கடைசியாகச் சம்புவனம் எனப்படும் இத்தலம் போந்தான். பாவம் தீரத் தவம் செய்யத்தக்க இடம் இதுவே எனக் கண்டு கொண்டான். தனித்திருந்து சிவபெருமானை நோக்கிக் கடுந் தவம் புரியலானன். அழகியதொரு சிறு திருக்குளத்தை அமைத்து அதன் கரையில் தனி மோனத் தவம் புரியும் அயனைச் சோதித்து அருள் புரியத் திருவுளங் கொண்ட பெருமான், தமது பிரியாவிடையாகிய உமையம்மைக்கு ஆண் உருவந் தந்து தாம் பெண் உருவேற்று அவன் எதிரில் காட்சி கொடுத்தார். ஐயனின் அருட்திருவிளையாட்டினைத் தன் தவ வலியால் அறிந்துகொண்ட பிரமதேவன் அவ்விருவரையும் வணங்கித் தன் நிலை கூறிக் கழுவாய் வேண்டினன். வேண்டுவார்க்கு வேண்டியதெல்லாம் ஈந்துவக்கும் நம் பெருமான் அவன் குறை நீக்கி மீண்டும் படைப்புத் தொழில் புரியும் வலிமையை அருளினர். அன்று பிரமன் தவம் புரிந்த இடமும் அதனருகே உள்ள குளமும் இன்றும் உள்ளன. பிரம தீர்த்த மண்டபமெனத் தெற்குவீதி நாலாம் சுற்றுப்பிரகாரத்தில் இருக்கிறது. இத்திருக்கோவிலின் முக்கியத் திருவிழா பிரமனுடன் தொடர்புடையதாகலின் பிரமோத்சவம்என்னும் பெயரில் 40 நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் பிள்ளையார், முருகன் இவர்களுக்கு 5நாட்களும், நால்வராகிய சமயாசாரியர்களுக்கு 3நாட்களும்

கலியாண சுந்தரமூர்த்திக்கு 3 நாட்களும், சந்திரசேகரப் பெருமானுக்கு 6 நாட்களும், சோமஸ்கந்தருக்கு 10 நாட்களும், சொக்கேசருக்கு 3 நாட்களும், மௌனத் திருவிழா 3 நாட்களும், சண்டேசருக்கு 3 நாட்களும், பஞ்சப்பிரகாரம் என்னும் பிரமனுக்கு அருள்செய்த பெருந்திருவிழா 1 நாளும், விடையாற்றியும், மண்டலாபிஷேகமும் முறையே ஒவ்வொரு நாளுமாக 40 நாட்கள் திருவிழா நடைபெறும். மாசி மிருகசீரிடத்தில் கொடியேற்றமும், பங்குனி ரேவதியில் தேரோட்டமும், அம்மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பஞ்சப் பிரகாரத் திருவிழாவும் நடைபெறுகிறது. ஆதியில் இறைவன் பிரமனுக்குக் காட்சி கொடுத்ததை விளக்க இன்றும், அப்பெரு விழாவில் எம்பெருமான் அம்பிகைத் திருக்கோலமேற்றும், அம்மை ஆண்டவனாக ஆண்கோலம் கொண்டும், திருவானைக்காத் தலத்தைச் சுற்றி இருக்கும் ஐந்து பிரகாரங்களிலும் பவனி வந்து எண்ணற்ற பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பது வழக்கமாக இருந்து வருகிறது. இத்திருத்தலத்தின் மிக முக்கியமான திருவிழா இதுவாகும். இங்கு ஜம்பு நாயகப் பெருமானுக்கு இத்துடன் வைகாசியில் வசந்தப்பெருவிழா 10 நாட்களும், தைபூசத் திருவிழா 10 நாட்களும் நடைபெறுகின்றன. அகிலாண்டநாயகிக்குத் தனியே ஆடிப்பூரத் திருவிழா 10 நாட்கள், நவராத்திரி 10 நாட்கள் விழா எடுத்துச் சிறப்பு செய்யப்படுகிறது.

# யானையும், சிலந்தியும் பூசித்தது

இவ்வளவு சிறப்பிற்கிடையிலும் அந்த இடம் ஜன சஞ்சாரமற்ற பெரும் காடாகத்தான் இருந்துவந்தது. அடர்ந்த நாவல்மரங்கள் சூழ்ந்த அக்காட்டை அகண்ட காவேரி இரண்டாகப்பிரிந்து தனது தூய அலைக்கரங்களால் தொட்டு வணங்கிக்கொண்டு இருந்தாள். பலவிதமான வனவிலங்குகளும் அந்தக் காட்டில் வாழ்ந்து வந்தன. அவற்றுள் ஒரு யானை பக்கத்து மலையான சுவேத கிரியிலிருந்து வந்தது. ஒருநாள் தற்செயலாக நாவல் மரத்தடியில் அமுதலிங்கேசர் திருவுருவத்தைக் கண்டது. முற்பிறப்பில் செய்த புண்ணியத்தால் யானை சிவலிங்கத்தைக் காணவும் மனம் அதில் ஈடுபடப் பரவசமுற்றது. இறைவனது திருவருள் நோக்கம் பெற்றதால் ஐந்து அறிவுகளே உடைய மிருகமாயினும் அதனுள்ளத்தில் மெய்ஞ்ஞான ஒளி பிறந்தது. இருவினை ஒப்பும் மலபரிபாகமும் ஏற்பட்டுவிட்டது. முன் கால்கள் இரண்டையும் வளைத்துத் தன் துதிக்கையை உயரத் தூக்கி வணங்கியது. அதன் பிறகு யானை அங்கேயே தங்கத் தொடங்கிவிட்டது. சேக்கிழார் கூறுவதுபோலக் காளத்தி மலையில் கண்ணப்பருக்கு ஏற்பட்ட அனுபவத்தைத் தான் யானையின் இப்புத்துணர்ச்சிக்கு ஈடாகக் கூறலாம். தல புராணம் இதை விரிவாகப் பேசுகிறது. இப்படியாக நாள் தோறும் யானை, விடியும் முன் துயிலெழுந்து காவேரியில் நீராடித் தன் துதிக்கை நிறைய நீரைமொண்டு எடுத்துக்

கொண்டு அத்துடன் சில பூக்களையும், தளிர்களையும், காய்கனி கிழங்குகளையும் பறித்து இடுக்கிக்கொண்டுவரும். வெண்ணுவலீசன் திருமுன் வந்ததும் குனிந்து வணங்கி சிவலிங்கத் திருமேனி மீது வீழ்ந்து கிடக்கும் சரகு முதலிய குப்பைகளை அகற்றிவிட்டுத் துதிக்கை நீரால் திருமுழுக் காட்டும். பின் தான் கொணர்ந்த பூக்களையும், தளிர்களையும் பெருமான் திருவுருவுக்குச் சூட்டி அழகு செய்யும். அதன் பின் தன்னிடமுள்ள காய்கனி கிழங்குகளைத் திருமுன் வைத்து நிவேதிக்கும். இவ்வாருக ஒரு நாள் இரண்டுநாளல்ல ஆண்டு பலவாக அவ்வேழம் பூசையை முடித்து வேற்றிடம் சென்று தங்கியிருந்து வருவதை வழக்கமாகக் கொண்டது. கற்றறிருந்து முறைப்படி தீட்சை பெற்ற ஞானியரும் வியக்கும் வகையில் வனவிலங்கான யானையின் பூசை தடை இல்லாமல் நடைபெற்று வந்தது. இந்நாளில் வெண்ணுவல் மரத்தில் சிலந்தியொன்று வந்து சேர்ந்தது. பழவினை வசத்தால் அதுவும் ஜம்புநாயகனின் சிவலிங்கத் திருமேனி காணப் பரவசமானது. மலபரிபாகமும் இருவினையொப்பும் வாய்க்கச் சிவபக்தி அப்பூச்சிக்கும் கை கூடியது. மரத்தின் மீதிருந்து எப்போதும் எம்பெருமானை வணங்கவும், தன்னளவுக்கேற்ப சிவத்தொண்டு செய்யவும் விரும்பியது. தன் வாய்நூல் கொண்டு பெருமானுக்கு அழகிய பந்தலமைத்து நாவல் மரத்தின் சரகு முதலியன சிவலிங்கத்தின் மேல் விழாது பாதுகாத்தலைத் தனது பணியாக்கிக் கொண்டது.

பெரியபுராணம் பேசும் பூசலார் மனக்கோயிலைப் போல ஜம்புநாயகருக்குக் கருப்பக்கிரகம், முன் மண்டபம், கோபுரம் முதலிய உறுப்புக்கள் சிலந்தியின் வாய் நூலால் வளர்ந்து கொண்டு வந்தது. மெய்ஞ்ஞான ஒளிபெற்ற அப்பூச்சியும் கூடத் தான் மரத்தின் மீது நிரந்தரமாக வசித்தால் சிவ அபசாரம் உண்டாகும் என எண்ணிப் பணி முடிந்ததும் வேறிடம் சென்று தங்கலானது.

முன்னாள் தன் பூசை முடித்துச் சென்ற யானை மறுநாள் காலை வழக்கம் போல நதியில் நீராடித் துதிக்கையில் திருமஞ்சனமும் அருச்சனைக்குரிய பூவுந்தளிரும் நிவேதனத்துக்கான பழங்களும் ஏந்தி வந்து சன்னிதி புகுந்த போது, என்றும் இல்லாமல் அன்று சன்னிதானத்தில் ஏற்பட்டிருக்கும் புதுமையைக் கண்டது. பழம் பிறப்புணர்ச்சியால் சிவபூசா விதியறிந்த வேழம் நாவல் மரக்கிளைகளை அழகு செய்யும் சிலந்திக்கூட்டைக் கண்டு கடுஞ்சினமடைந்தது. சிவபூசைக்குச் சிலந்திக்கூடு கட்டிய பூக்களையும் தழைகளையும் கூட எடுப்பது அபசாரம் என்பது விதி. எம்பெருமானின் தலைக்கு மேலேயே அவ்வித அபசாரம் நிகழ்ந்துள்ளதைக் காணச் சகியாத யானை சினம் மேலோங்க பூசையையும் மறந்து ஆண்டவன் இருப்பிடத்தில் அடாது செய்த அச்சிலந்தியைக் கொன்றொழித்திட சீறி எழுந்து அங்குமங்கும் தேடி அலைந்தது. பூச்சியின் இருப்பிடம் அதற்குப் புலப்படாது துடித்தது. கடைசியாக ஒருவாறு தேறி, சிலந்தி வலையைத் துதிக்கையால் பிய்த்து குலைத்தது. நாவல் மரக்கிளையில் சிலந்தி விளைவித்த கூட்டின் சின்னமே இல்லாது சீர் குலைத்த பின், தான் சிலந்தியின் வலையாகிய எச்சிலைத் தீண்டிய அபசாரம் நினைவுக்கு வரவும் அவசர அவசரமாகக் காவிரிக்கு ஓடியது. நதிநீரில் தூய்மை பெற மீண்டும் நீராடி மறுமுறை சிவபூசைக்குரிய பூ, பழம் முதலிய வற்றைத் தேடி எடுத்துக்கொண்டு ஆண்டவன் சன்னதிக்கு வந்து சேர்ந்தது.

இதனிடையே சிலந்தி வந்து கண்டபோது தனது சிவப் பணி குலைக்கப்பட்டுள்ளது அறிய மிக வருந்தியது. அழிந்த தன் நூலாம் படைக் கோயிலைப் புதுப்பிக்கலாயிற்று. வாய் நூல்கொண்டு மீண்டும் அழகான மண்டபமமைத்து வைத்தது. இவ்வாறு பக்தர்களின் போராட்டம் பல நாட்கள் நடை பெற்று வந்ததாயினும் ஒருவர் மற்றவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பில்லை. கண்ணப்பரும், சிவகோசரியாரும் போலச்

சிலந்தியும், யானையும் பல நாட்கள் ஒருவர் மற்றவரின் செயலுக்குச் சினந்து வருந்தினரெனினும் சந்திக்காமலேயே தங்கள் தெய்வத் திருப்பணியைச் செய்து கொண்டிருந்தனர்.

விதி வசத்தால் ஒரு நாள் யானை பூசைக்கு வரும் நேரம் சிலந்தி தன் பணியில் முனைந்திருந்தது. இரு பக்தர்களும் சந்தித்துக்கொண்டனர். யானை சிலந்தி வலையைக் காணச் சீறித் துதிக்கையை நீட்டி அதைக் குலைத்தது. சினங்கொண்ட சிலந்தி யானைத் துதிக்கைத் துவாரத்தினுள் புகுந்து தலையின் உச்சியிடம் போய் நறுக்கெனக் கடித்தது. உயிர் நிலையான பகுதியில் சிலந்தி கடிக்கவும் வலி தாங்காமல் அவ்விடத்திலேயே மண்ணில் விழுந்து புரண்டு துடிதுடித்து யானை இறந்தது. துதிக்கையினின்றும் வெளிவர இயலாது சிலந்தியும் யானையோடு மாண்டது.

விந்தையான தெய்வீக பக்தர்கள் இருவரும் யானையாகவும் சிலந்தியாகவும் இப்படி முடிவுற்றமை காண விண்ணவர்களும், முனிவர்களும் கரங் கூப்பி இறைஞ்சினர். சிவபெருமான் நாவல் மரத்தடியிலிருந்த சிவலிங்கத் திருவுருவத்திலிருந்து உமையொரு பாகனாக விடைமீதேறி வந்து அவ்விருவரையும் கருணையோடு நோக்கி யானை சிவலோகம் சென்று தமது பூதகணத் தலைமையை ஏற்று வாழ வரமளித்தார். பின் சிலந்தியைச் செந்தமிழ் நாட்டுப் பேரரசு கொண்டிருக்கச் சோழ மன்னனாகப் பிறக்கத் திருவருள் பாலித்தார். அன்றுதொட்டு நாவற்கா ஆனைக்காவெனப் பெயர் பெற வைத்தார். வடமொழியில் கஜாரணியம் எனவும் தீந்தமிழில் திருவானைக்கா எனவும் இத்திருத்தலம் புதுப்பொலிவு பெறலாயிற்று.

# கரியமாலீஸ்வரர் கோயில்

(இராமன் பூசித்தது)

இத் திருத்தலம் மேலும் இராமாயணத்தோடு தொடர்புடையதாகப் பேசப்படுகிறது. இராமன் பூசித்த சிவலிங்கமும் அவன் அகழ்ந்தெடுத்த திருக்குளமும் இங்கு இன்றும் உள்ளன. இவற்றின் பின் நிற்கும் சுவை மிக்க சரித்திரத்தையும் சற்றே நோக்குவோம்.

இராமாயணம் பேசும் இராவணனும், அவனது குடும்பத்தாரும் தூய பிராமண சாதியைச் சேர்ந்தவர் என்பதைப் பலரும் மறந்து விடுவார்கள். இதிகாசம் பேசுவது கொண்டு நோக்கினல் உண்மையான பிரமகுலத்தவன் இராவணன் தான். அவன் முறைப்படி பிரமதேவனின் மரபில் வந்தவன்; ரிஷிகுமாரன்; நான்கு வேதங்களையும் முறையாகப் பயின்றவன்; சாம கானத்தால் சிவபெருமான் மனம் கவர்ந்த இசை ஞானி; சிவ பூஜா துரந்தரன். அவன் அருமைத் தம்பி கும்பகர்ணனும் அண்ணனில் எள்ளளவும் குறையுடையவனல்லன். இலங்கைப் பெரும் போரில் அவ்விருவரையும் கொன்று சீதையை மீட்டுத் திரும்பிய இராமனைப் பிராமணோத்தமர்களாகிய அவ்விருவரையும் கொன்ற பாவம் "பிரமகத்தி" என்னும் பெயரால் நிழலுருவில் தொடரலாயிற்று. இராமன் தன்னைத் தொடரும் இருபெரும் பேயுருவங்களால் மன அமைதி இழந்து வருந்தினன். கடைசியில் இராமேசுவரத்தில் செய்த சிவ பூசையால் இராவண வதத்தால் ஏற்பட்ட பாவம் நீங்கியது. ஆயினும்

கும்பகர்ணனின் ஆவி தொடர்ந்தது. அயோத்தி நோக்கிய தனது யாத்திரை அந்த ஆவியால் தடைப்படுவது கண்ட சக்ரவர்த்தித் திருமகன் பொன்னியாற்றங்கரையில் தவம் புரியும் புண்ணியர்களான முனிவர்களை அண்மிப் பணிந்து கும்பகர்ணனைக் கொன்ற பிரமகத்தி நீங்க வழி கூற வேண்டினன். அருந்தவ முனிவர்களும் இராமனின் தொல்லை நீங்க, ஞான பூமியாகிய நாவற்காவில் சிவலிங்கம் அமைத்துச் சிவபூசை செய்யத் தூண்டினர். தன் பாவம் தொலைய இராமபிரானும் ஐம்புநாயகரின் திருக்கோயிலின் மேற்குப் புறத்தில் பெரியதொரு குளம் வெட்டி அதன் கரையில் அழகான கோயிலெடுத்தான். கோயிலில் பிரதிட்டிக்க ஏற்றதொரு சிவலிங்கத் திருமேனியைக் கொணரும்படித் தன் அன்புக்குரியவனான அங்கதனை ஏவினன். அங்கதனும் அங்ஙனமே பல இடங்களிலும் தேடி ஏற்றதாகக் கண்டதோர் அழகிய சிவலிங்கத்தைக் கொணர்ந்து கொடுத்தான். சீதை இலக்குமணன் இருவரும் துணையாக இராமனும் அவ் விலிங்கத்தைப் பிரதிட்டை செய்து முறைப்படி சிவ பூசை செய்து தன் பிரமகத்தியாகிய பெரும் பாவம் தொலையப் பெற்றான். கார்முகில் வண்ணனாகிய இராகவனால் பூசிக்கப் பெற்ற பெருமைக்குரிய அழகிய திருக்கோயில் இன்றும் இங்குள்ளது. மாலவனால் கட்டப்பட்ட கோயிலாகையால் அது கரிய மாலீச்சுரம் அல்லது நீல விண்டீச்சுரம் என்னும் திருப்பெயரோடு விளங்குகிறது. இராகவன் வெட்டிய திருக்குளம் இராம தீர்த்தம் என்னும் பெயரோடுள்ளது. தைத் திங்களில் புனர்பூச நட்சத்திரத்தில் இன்றும் ஐம்புநாயகப் பெருமான் அப்பொய்கையில் தெட்பத் திருவிழாக் கொண்டருளுகிறார்.

# கௌதமன் வரம் பெற்றது

இராமாயணத்தோடு தொடர்பு மேலும் ஒரு வகையால் இத்தலத்துக்கு உண்டு.

இந்திரன் இச்சைக்கு இணங்கிக் கற்பிழந்த காரிகை அகலிகை, கள்ளத்தனத்தைக் கண்டுகொண்டு கணவன் கௌதமனால் சினந்து சபிக்கப்பட்டுக் கல்லான கதையோடு இராமாயணம் நிற்கும். ஆனைக்காத் தலபுராணம் அக் கதையை மேற்கொண்டு தொடர்ந்து சொல்லி முடிக்கும் அழகு அருமையானது.

வேற்றானோடு காமக் களியாட்டில் ஈடுபட்டிருந்த தன் தாரத்தைக் கல்லாகும்படிச் சபித்த கௌதமன் கண்காண அவள் உணர்ச்சியற்ற கல்லாய் மாறிவிட்டாள்; இந்திரனும் தனக்கு அளிக்கப்பட்ட தண்டனையோடு வானுலகு நோக்கி ஓடிப்போனான்; கோபத் தீயால் கொதிப்புற்ற முனிவன் மனம் பழிவாங்கிவிட்டதாகத் தனக்குள் சற்றே அடங்கியது. எனினும் முனிவை அடியோடு அகற்ற வேண்டிய முனிவன் அல்லவா! தான், என்ற அறிவுணர்ச்சி சிறிது நேரத்துக்கு எல்லாம் அவன் கருத்தில் முளைவிட்டது. மனித சஞ்சாரமற்ற பெருங்காட்டில் தான் மட்டும் தனிமையாக வாழப்போகும் பயங்கரத்தை எண்ணிப் பார்த்தான். உற்றுழி உதவி வந்த ஒருத்தியையும் இழந்து நிற்கும் விதியை எண்ணி வருந்தலானான். தற்செயலாக வழுக்கி விழுந்த தாரத்தை நினைத்து நினைத்து ஏங்கினான். தன்னிகரற்ற பேரழகியான அகலிகையை அவன் மனம் மறக்க முடியாது தவித்தது வியப்பல்லவே?

காட்டுக்குயில்கள் கூவும் போதெல்லாம், இனிய நறுமண மலர்கள் மலர்ந்து தேன் சொரிய வண்டுகள் அவற்றை நாடித் தென்பாங்கு பாடிவரும் போதெல்லாம், மெல்லிளந் தென்றல் தவழ்ந்து செல்லும் போதெல்லாம் கௌதமனின் மனம் தான் பிரிந்துபோன அழகிய அந்த ஆரணங்கை - அகலிகையை எண்ணி எண்ணிக் கண்ணீர் விடலாயிற்று. மனம் ஒருமைப் படாமல் தவம் கைகூடாமல் தவித்தான். தாரத்தை இழந்த இருக்கை அவனுக்குத் தழலாய்த் தகித்தது. எனவே பர்ணசாலையை விட்டுக் கிளம்பிப்பற்பல தலங்களையும் தரிசித்துக்கொண்டே யாத்திரை செய்யத் தலைப்பட்டான். ஊரூராகச் சுற்றிக் கடைசியில் திருவானைக்கா வந்து சேர்ந்தான். புனிதமான பொன்னியில் புனலாடி, பூவும் நீரும் கொண்டு புண்ணிய மூர்த்தியான ஜம்புநாயகரைப் பூசிக்கத் திருக்கோயிலுள் புகுந்தான். ஆதிநாளில் பிரமன் தனது படைப்புத் தொழில் சீர் கேடுறவும், தந்திர கற்பத்தில் திரேதாயுகத்தில் தனது குறை நீங்கவும், சிருட்டித் தொழில் சீராக நடைபெறவும், பூசித்துப் பேறு பெற்றதால் "பிரமலிங்கம்" என்னும் சிறப்புத் திருப்பெயர் பெற்ற அப்புலிங்க மூர்த்தியை ஆகம முறைப்படிப் பலகாலம் பூசிக்கத் தலைப்பட்டான். பூசை முடிந்து மன உருக்கத்தோடு அமைதியும் இன்பமும் வேண்டி ஆண்டவனைப் பிரார்த்தித்தான்.

கௌதமனின் பக்திப் பெருக்கை உணர்ந்த பரமன் அவனுக்குக் காட்சி கொடுத்து, வருங்காலத்தில் அகலிகை இராமனது திருவடிபட மறுபடியும் பெண்ணாகி விடுவாள். அதன் பிறகு இருவரும் முன்போல இன்பமிக்க இல்லற வாழ்வு நடத்தலாம் எனத் திருவாய் மலர்ந்தார். அன்று தொட்டு அரன் பூசை மறவாது ஆற்றி வந்து இறுதியில் ஆண்டவன் கட்டளைப்படி அகலிகையைப் பெற்று நல்வாழ்வு வாழ்ந்தான். எனவே ஆனைக்கா இராமாயணத்தோடு, ஒரு புறம் கும்பகர்ணனுலும், மற்றொரு புறம் கௌதமனுலும் நெருங்கிய தொடர்புடைய திருத்தலம் என்பது தெளிவு.

## பராசரன் அருள் பெற்றது

உலகத்தின் மாபெரும் முதல் சத்தியாக்கிரகியான அரிச்சந்திர மன்னன் சரித்திரத்தோடும் இத்திருத்தல வரலாறு தொடர்புடையது.

இந்திர சபையில் ஒருநாள் பெரியதொரு விவாதம் உண்டாயிற்று. சத்தியம் தவறாதவர் மானுடரில் யாரேனும் உளரா? என்பது தலைப்பு. பலரும் பலவாறு பேசினர். மாமுனிவனான வசிட்டன் "மனிதரில் சத்தியம் தவறாதவர்கள் உள்ளனர்" என்று வாதித்தான். விசுவாமித்திரமுனிவன் அதை மறுத்துப் பேசினான். குறிப்பாக மிகச் சிறந்த சத்தியாக்கிரகியான அரிச்சந்திரன் பெயர் கூறப்பட்டது. அவனது அறநெறி வழுவாமையைப் போற்றிய வசிட்டனை விசுவாமித்திரன் தான் அவனைத் தருமவழி தவறியவனாகக் காட்ட முடியும் என அடித்துப் பேசினான். அதன்பயனாக நிகழ்ந்த அந்த மன்னனின் சோகக் கதையும் அதன் முடிவும் அனைவரும் அறிந்தவொன்றே. அமரசபையில் சூளுரைத்தபடி வசிட்டன் வென்றான். கௌசிகன் தோற்றுப்போனான். பந்தயப்படித் தோற்றவன், கள்குடித்த பிராமணன்போல ஒற்றைத்துணியோடு தென்திசை நோக்கிச் சமூகத்தினின்றும் விலகிப் போகவேண்டும். அறிஞனான வசிட்டன், கௌசிகன் அப்படிப் போக வேண்டாவெனப் பெருந்தன்மையோடு மன்னித்துவிட்டான். ஆனாலும் விசுவாமித்திரன் நெஞ்சில் உள்ள குரோதத் தீ அணையவில்லை. அவன் மனம் பொருமியது. தனியே இருந்து தன் எதிரியான வசிட்டனைத் தொலைக்க ஆபிசார வேள்வி ஒன்று செய்யலானான்.

தீயமந்திரங்கள் உச்சரிக்கப்பட்டன; அமங்கலப் பொருள்கள் ஆகுதி செய்யப்பட்டன; வேள்வித் தீ பொல்லாங்கின் உருவமாக ஓங்கி வளர அதிலிருந்து கொடிய பூதமொன்று தோன்றியது. கௌசிகன் தனது வைரியான வசிட்டனைக் கொன்று வரும்படி அப்பூதத்தை ஏவினான். பூதமும் அவன் ஆணைப்படி வசிட்டனின் பர்ணசாலைக்குச் சென்றது. தற்செயலாக வசிட்டன் அப்போது அங்கு இல்லை. நல்ல இரவு நேரம். மற்றெல்லோரும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். வசிட்டனின் ஒரே மகனான சத்தி முனிவன் தூங்கியவர்களில் ஒருவன். அவன் தன் தந்தையைப் போன்ற சாயல் உள்ளவனாகையால் காரிருளில் மகனை தந்தை என்று தவறாக எண்ணிய பூதம் சத்தி முனிவனைக் கொன்றோடியது.

சற்று நேரம் செல்ல வீடு திரும்பிய வசிட்டன் தன் அருமைக் குமாரன் கொலையுண்டு கிடப்பதை அறிந்து அலறினான். தனது ஒரே மகன் இறந்து போகக் குலநாசம் வந்ததென எண்ணி ஏங்கும் வசிட்டனைத் தேற்ற நான்முகன் அங்குத் தோன்றினான். இறந்தவன் மனைவி கருவுற்றிருக்கும் செய்தியைக் கூறி வசிட்டனின் குலம் உலகெலாம் போற்ற ஒளிவீசப் போவதை எடுத்தோதித் தேற்றினான். திசைமுகன் தேற்றத் தெளிவுற்ற வசிட்டன் தனது மருமகள் வயிற்றில் இருக்கும் சிசுவின் செவிப்பட இடைவிடாது வேத மந்திரங்களை உச்சரித்து வந்தான். தாய் வயிற்றினுள் இருந்தே தத்துவ ஞானம் முழுவதையும் கேள்வி ஞானத்தால் உணர்ந்த அவ்வுயிர் ஆண் மகவாகப் பிறந்து பராசரன் என்னும் பெயர் கொண்டது. வளர்ந்து ஓர் வாலிபனாகும் போது வசிட்டனின் பேரனான பராசரன் தன் குடும்பத்தின் சோகக் கதை கூறப்பெற்றுணர்ந்தான். அநியாயமாகத் தன் தந்தை கொல்லப்பட்டதற்குப் பழிவாங்க அவன் இளமை உள்ளம் துடித்தது. பிதாமகரிடம் விடைபெற்று வீட்டைவிட்டு வெளியேறினான். தாயின் விதவைக் கோலம் நீங்க, அகில புவனத்திலுமுள்ள அந்தண அரக்க

பூதங்களையும் அழித்து ஒழிப்பதாகச் சூளுரைத்து அதை முடிக்க ஏற்றதொரு இடத்தை நாடிப்பாரத தேசமெங்கும் சுற்றியலைந்தான். இறுதியில் அறிஞர்கள் பலர் கூறக் கேட்டு ஆனைக்காவை அண்மினன். ஆகம முறைப்படி ஆலயத்தில் பூசித்தான். அவன் பூசைக்கு மகிழ்ந்த சிவபெருமான் திருவருளால் எண்ணிய எண்ணம் நிறைவேறப்பெற்றான்.

நமது இந்துசமயக் கோட்பாடுகளின்படி ஒருவன் நல்ல முறையில் அல்லாமல் துர்மரணம் அடைந்தால் அவன் ஆவி குறிப்பிட்ட சிலகாலம் வரை பேய் உருவாக அலையும். ஆன்மா சாந்தியடையாது திரியும். பராசரனின் தந்தை சத்தி முனிவன் தற்செயலாகக் கொல்லப்பட்டதால் அவன் ஆவி அமைதியுறாமல் பேய் உருவில் திரிந்து கொண்டிருந்தது. தன் மகன் செய்த சிவபூசையின் பயனாய் மீண்டும் மானுட யாக்கை பெற்று பராசரன் முன்வந்தது. சத்தி முனிவன் முன்போல் தன் அருமை மகனைத் தழுவி மகிழ்ந்தான்.

உயிர் பெற்ற சத்தி முனிவன் தன்னைக்கொன்ற அரக்கப் பூதச் சாதியை அடியோடு அழிக்க எண்ணினன். அங்கேயே ஆனைக்காத் திருக்கோயிலின் வடகிழக்கு மூலையில் வேள்விச் சாலை அமைத்து மாபெரும் யாகம் ஒன்றை நடத்தலானான். வேள்வித் தீ ஓங்க ஓங்க ஒவ்வொன்றாக இவ்வகில புவனத்திலும் உள்ள அரக்க பூதங்கள் அனைத்தும் அத்தீயினில் மந்திர சக்தியால் ஈர்க்கப்பட்டு வந்து விழுந்து விட்டில் பூச்சிகளைப்போல மாண்டொழிந்தன.

கடைசியாக மீந்திருந்ததொரு பூதம், எட்டுத்திக்கு பாலர்களில் ஒருவராக - தென்மேற்குத் திக்கின் காவலனை நிருதி பகவானைத் தாங்கும் வாகனமானது. சத்திமுனிவனின் மந்திர சக்தி அதையும் கட்டி இழுத்தது. சிவ பூசகர் செயலுக்கு எதிர் நிற்கும் ஆற்றல் எவருக்குத்தான் உள்ளது?" நிருதியும் தேம்பினன். நெடுஞ்சாண்கிடையாக நெற்றிக்கண்

நிமலன் திருவடியில் "அபயம்", "அபயம்" என அலறிக் கொண்டுபோய் வீழ்ந்தான். சரணடைந்தாரைக் காப்பாற்ற எதையும் செய்யும் சங்கரன், கருணையே உருவான கண்ணுதல், நிருதியையும், அவன் ஊர்தியையும் காக்க விரும்பினான். பூர்ணாகுதிப் பொருளான அதனை "இங்கு தா" என ஓர் அசரீரி எழுந்தது. தனது ஆகுதியை ஏற்க அகிலாண்டநாயகனே வந்ததை அறிந்த முனிவன் மனம் மகிழ்ச்சியால் எக்களித்தது. தனது கண்ணுக்கெதிரில் விடையேறி வந்த விமலனைக் கண்டு வீழ்ந்து வணங்கினான். "மண்ணுலகம் போற்றும் மாமுனிவனாக என்றென்றும் விளங்குக!" என அவனை வாழ்த்தி அத்துடன் நிருதியையும் அவன் வாகனமான பூதத்தையும் விடுவித்து அருள் செய்த அமுதலிங்கேசர் அக்கருணையின் காரணமாக பச்சாதாபத்தின் உருவமாக வந்தமைபற்றி "பச்சாதாபேசுரர்" என்றும் பெயரிட்டு வணங்கப்பட்டார்.

# கோச் செங்கணான்

பட்டத்தரசி பிரசவ வேதனைப்பட்டுக் கொண்டு இருக்கிறாள். உறையூரின் சோழ மாளிகையில் உள்ள ஒவ்வொருவரும் கவலை தோய்ந்த முகத்தோடு இருக்கிறார்கள். மருத்துவச்சிகள் பலரும் அந்தப்புரத்தில் பரபரப்போடு இங்குமங்கும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். மன்னவன் தனது மந்திரிகளில் சிலரோடு யோசித்துக்கொண்டிருக்கிறான். புராணம் அவன் பெயர் சுபதேவன் என்றும், அரசியின் பெயர் கமலவதி என்றும் கூறுகிறது.

அரசனிடம் இன்னும் சில நாழிகைக்குள் குழந்தை பிறக்கப்போகிறதென்று மருத்துவச்சிமார்கள் வந்துகூறினர். அப்போது அங்கிருந்த அரசவைச் சோதிடன் குழந்தை பிறக்கும் நேரம் குறித்துக் கணக்கிட்டுச் சற்றே தொண்டையைக் கனைத்துக்கொண்டு மன்னனிடம் பேசினான்: "வளவ! பிறப்பது ஆண் குழந்தை. இக்குழந்தை இன்னும் ஒரு முகூர்த்த நேரம் கழித்துப் பிறக்குமாயின் மாநில முழுதாளும் மாமன்னனாகும்" இச்செய்தி எப்படியோ பிரசவிக்க இருக்கும் தாய் கமலவதியின் காதுக்கு எட்டியது. அரச மாதா அழைப்பதாக ஆள் ஒருவன் சுபதேவனிடம் வந்து நிற்க மன்னன் அந்தப்புரம் புகுந்தான்.

கருவுயிர்க்கும் துடிதுடிப்பில் வேதனைப்பட்டுக்கொண்டு இருக்கும் அரசி மன்னவனை அருகே அழைத்து "நாத, என் இரண்டு கால்களையும் கயிற்றால் பிணைத்து உயரத்தூக்கி

உத்திரத்தில் கட்டிவிடுங்கள். ஒரு முகூர்த்தம் சென்றபின் அவிழ்த்துவிடுங்கள். என் உயிர்பற்றிய கவலை வேண்டா. பிறக்கப்போகும் என் மகன் அவனி முழுதும் ஆளுவானேயாயின் அவன் நற்றாய் என்னும் பெயரோடு நான் என்றென்றும் புகழுடம்பில் வாழ்வேன். மன்னவ! என் வேண்டுகோளை மறுக்காதீர்கள்" என்றாள். பிரசவிக்கும் நேரத்துக்கு மேல் சில மணித்துளிகள் குழவி தாய் வயிற்றிலிருந்தாலும் தாயின் உயிருக்குப் பேராபத்து விளையும் என எல்லோரும் அறிவர். ஆனாலும் தன் குலமும், இனமும் புகழ்பெற இயற்கையை எதிர்த்துப் போராடித் தன்னையே பலியாக்கிக்கொள்ளத் துணிந்துவிட்ட அந்த அரசமாதேவியை யாரும் எது கூறியும் தடுத்து நிறுத்த முடியவில்லை. தனது கால்கள் இரண்டும் கயிற்றால் சுருக்கிட்டு மேல்நோக்கிக் கட்டப்பட்டவளாய் அரசி கமலவதி ஒரு முகூர்தத நேரம் உடல் வேதனையால் துடிக்க மனம் மட்டும் மாமன்னனைப் போகும், தன் மகவினை எண்ணி மகிழ்வோடு இருந்தாள். மூன்றரை நாழிகை கழிந்ததாக நாழிகை வட்டில் அறிவிக்கக் கண்டு கட்டவிழக் கழி பேருவகையோடு கமலவதி ஆண்குழந்தையொன்றைக் கருவுயிர்த்தாள். உற்றநேரம் கழித்துப் பிறந்ததால் குழவியின் கண்கள் இரண்டும் சிவந்திருந்தன. கண்கள் சிவந்த மகவினைக் கையால் வாரி எடுத்து மார்புறத் தழுவிய இராசமாதேவி கமலவதி "என் செங்கண்ணு!" என்று அழைத்தவாறே மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்டாள். உறையூரைத் தலைநகராகக் கொண்டிருந்த [கடைச்சங்கம் மருவிய காலச்] சோழ பரம்பரையில் தன்னிகரற்று விளங்கிய கோச்செங்கண்ணனின் வரலாறு பழந்தமிழ் நூல்களில் பரக்கக் காணக் கிடைக்கிறது. உறையூர்ப் புராணமும், செவ்வந்திப்புராணமும், திருவானைக்காப்புராணமும் செங்கண்ணன் வரலாற்றை அழகொழுக எழுதிப் பார்க்கின்றன. சங்கத் தமிழான புறநானூறு மேலும் சில மெய்ச் சிலிர்க்கவைக்கும் உண்மைகளைப் பேசுகிறது.

2000 ஆண்டுகளுக்கு முன் தண்டமிழ் மண்ணின் தலைநகராகச் சீரும் சிறப்பும் கொண்டு விளங்கிய உறையூரை நம் மனக்கண்ணால் நோக்குவோம். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வாணிபம் செய்யவும், கலை நுணுக்கம் பயிலவும் வந்து குழுமியுள்ள பல்லாயிரக் கணக்கான வேற்று நாட்டவர்களும் நம் தமிழினத்தவரும் நடமாடும் கடைவீதிப் பகுதி! மாநில முழுதும் ஒரு குடை நிழலில் செங்கோலோச்சும் மா மன்னனின் மாளிகை! அந்தரத்து அரம்பையர் வெள்க அழகாக நடைபயிலும் ஆரணங்குகள் சூழ்ந்த அந்தப்புரம்! இன்னும் சற்று மேற்கே நடப்போம்! அதோ! அங்கே உறந்தை மாநகரத்தின் மேல்கோடியில் வானளாவிய மதில்கள் சூழ அமைந்துள்ள அக்கட்டிடம் தான் சிறைச்சாலை! குற்றம் புரிந்தோரைத் தண்டித்துத் திருத்தவென்றே ஏற்பட்ட இடம் அது! அங்கு ஒருபுறம் இரும்புக்கம்பிக் கதவுகள் தாழிடப்பட்டு முன்பக்கத்தில் அரசாங்கப் போர்வீரன் காவலிருக்கக் காண்பதுதான் தன்னிடம் தோற்ற சிற்றரசர்களை எல்லாம் செங்கணான் சிறையிடும் காராக்கிரகம். கூண்டில் அடைபட்ட வேங்கைபோல் அதில் குமுறிக் கொண்டிருக்கும் ஆணழகன் சற்றுமுன் வெஞ்சமரில் தோற்றுத் தற்செயலாய் எதிரியிடம் பிடிபட்டுச் சிறையுண்டு கிடக்கும் சேரன் கணைக்காலிரும்பொறை. தன்னிகரற்ற மாவீரனை இரும்பொறை சிறைப்பட்டது விதியின் விளையாட்டுத் தான். தனது வீரத்தைப் பாராட்டிப் பல்லாயிரம் புலவர்கள் பரணிபாட, அரசு கட்டிலில் அமர்ந்திருந்த மலைநாட்டு மாமன்னன் ஊழ்வலியால் சிறைப்பட்டு ஒரு கைதியாக உறந்தைக் காராக்கிரகத்தில் புழுங்குகிறான். துக்கம் நெஞ்சை அடைக்கிறது. நா பேச முடியாமல் வறண்டு போனது. ஒரே தலைசுற்றல், மயக்கம் தன்னையும் மீறிய வேட்கையால் காவற்காரனை நோக்கித் "தண்ணீர்" "தண்ணீர்" என்று கைநீட்டினான். கைதியின் குரலால் கலவரமடைந்த காவல்வீரன் திரும்பிப்பார்த்தான். மீண்டும் "தண்ணீர்" "தண்ணீர்" என்று தவிப்படங்காமல் கூவியது சேரவேந்தனின் வாய். முதலில் கைதிதானே

என்று அலட்சியம் காட்டிய சேவகன், அடுத்து எழுங்குரல் மூலம் உயிர்த் தவிப்பை உணர்ந்துகொண்டு தண்ணீர் கொணர ஓடினுன். ஒரு குவளை நன்னீரோடு திரும்பி வந்தவன். குவளையைச் சிறைக்குள் நீட்டினுன். வாங்குவாரற்றது கண்டு கைதி உறங்குகிருனே எனக் கருதி மெல்ல "ஐயா! இந்தாருங்கள் தண்ணீர். பருகுங்கள்" எனக் கூறினுன். மேலும் உள்ளிருந்து எவ்விதப் பதிலும் காணுது கம்பிக் கதவின் இடுக்கின் வழியே உள்ளே கூர்ந்து நோக்கினுன். காவற்காரனின் கண்கள் இரும்பொறையின் சவம் வீழ்ந்து கிடப்பதைத்தான் கண்டன. கலவரமடைந்த சேவகன் இச்செய்தியை அரசனிடம் அறிவிக்கப் பரபரப்போடு அரண்மனையை நோக்கி ஓடினுன்.

அது நல்ல தருணம். அத்தாணி மண்டபத்தில் அரசன் அமைச்சர்கள் முதலிய எண்பேராயமும் ஐம்பெருங் குழுவும் சூழ வீற்றிருக்கும் நேரம். நல்லிசைப் புலவரான பொய்கை யார் அவன் பெற்ற வெற்றிச் சிறப்பைச் சித்தரிக்கும் இரத்தினச் சுருக்கமான சிறு நூல் ஒன்றை அவ்வரசவையில் அரங்கேற்றி முடித்த சமயம். நாற்பது வெண்பாக்களில் செங்கணனின் வீரப்பிரதாபமும் வெற்றி மிடுக்கும் விவரமாக விளக்கப்பட்ட சிறு காப்பியம் "களவழி நாற்பது" அந்நூலைப் பாடியது கேட்டு அரசவையில் உள்ள அத்தனை பேரும் சிரக்கம்பம் செய்யப் பரவசமடைந்த சோழ மாமன்னன் பொய்கையாரைத் தன் இருக்கை அருகிலே அழைத்திருத்தி "புலவரே" தாங்கள் என்னென்ன வேண்டுமோ அதை எல்லாம் எடுத்துக் கொள்ளலாம். நான் தங்கள் நாவில் நடம்புரியும் தமிழ்வாணியின் அடிமை" என்ருன்.

தன் வேண்டுகோளுக்குப் பதில் கூருது வெகுநேரம் வாளா இருந்துவிட்ட பொய்கையாரை மீண்டும் சற்றே ஏறிட்டுப் பார்த்த சோழ வேந்தனைப் புலவர் "மாமன்னு நான் வேண்டுவதைத் தட்டாது கொடுப்பீரா?" என்ருர்.

சற்றேபதட்டத்தோடு செங்கண்ணான் "வளவர்களின் பேச்சிலே தங்களுக்கு நம்பிக்கை இல்லையா புலவரே!" என்னுமுன் "ஐயா! என் அருமை நண்பன் சேரமன்னன் கணைக்காலிரும்பொறையை விடுதலைசெய்து, சிறையினின்றும் நான் மீட்டுக்கொண்டு போக அனுமதி வேண்டும். தாங்கள் செய்வீர்களா?" என்றார் கவிராயர்.

தமது சொந்த நலனைத் துச்சமாகக் கருதி நாடும், நண்பனும் வேந்தனும் வாழ வரங்கோரி நிற்கும் தியாகமூர்த்தியாகப் புலவரைக் கண்ணெதிரில் காணும் செங்கண்ணான் மனம் நெகிழ்ந்து போனான். புலவர் மேலும் பேசினார். "செங்கண் வளவ! சேரனை இரும்பொறை தங்கள் சிறையில் கைதியாக இருக்கத்தக்கவனல்லவே? தங்கள் நண்பனாக, துணைவனாக அல்லவோ இருக்க வேண்டும்?" அரசனது மனத் திரையில் போர்க்களக் காட்சிகள் நிழலாடின. இரும்பொறையின் வீர சாகசங்கள் மெய்ச்சிலிர்க்க வைத்தன. விதி வலியால் தற்செயலாகக் கைதியாக்கப்பட்ட நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. அம் மாவீரனை, புலவரைக் காரணமாகக் கொண்டு விடுவித்து நண்பனாக்கிட மனம் நாடியது. "பொய்கையாரே! வாருங்கள் இருவருமே குணவாயிற் கோட்டம் போகலாம்" எனத் தன் அரசுக்கட்டிலைவிட்டு இறங்கினான். பொய்கையாரும் பின் தொடர்ந்தார்.

அப்பொழுதுதான் உள்ளே புகுந்த சிறைக்காவலன் அவலச்சேதி சொல்லச் சற்றே தயங்கினும் கடைசியாக இரும்பொறை இறந்த சேதி வந்தது.

அரசனும் புலவரும் பதறிப் போயினர். குணவாயிற் கோட்டம் நோக்கி விரைந்து ஓடினர். கதவம் திறக்கப் பட்டது. இரும்பொறையின் உயிரற்ற தேகம் அமைதியாகக் கிடந்தது. எதிர்ப்புறச்சுவரிலே வீழ்ந்து கிடந்தகரித்துண்டால் அரைகுறைப் பிரசவத்தில் பிறந்த மாமிசப்பிண்டமானாலும்

சரி, நோயுண்ட குழந்தை இறந்தாலும் சரி, அதைக்கூட வாள் நுனியால் கீறியே புதைப்பது அரச குலத்து மரபு. அப்படி இருக்கச் சங்கிலியால் கட்டப்பட்ட நாயைப் போல ஊனுயிர் வாழ எதிரியிடம் ஊண் தேடி நிற்கும் கயவரை நமது குடிபெற்றிருப்பது நியாயமா?" என்ற பொருள் பொதிந்த அகவற்பா ஒன்று எழுதப்பட்டிருந்தது. அறைக்குள் புகுந்த பொய்கையார் "ஐயோ" என அலறினர். செங்கண்ணனே முதலில் அகவலைப் படித்துவிட்டு அரசன் சவத்தை நோக்கினன். மாறி மாறிப் பார்த்துக்கொண்டே நின்றான். அவன் கண்கள் பனித்தன; வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். சுற்றுமுற்றும் நோக்கினன் வடகரையில் வளர்ந்த வெண்ணாவல் மரத்தின் கிளைகள் தென்றலில் அசைவது அவன் கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது. கன்னங்களில் கண்ணீர் வழிய உடைவாள் நழுவிக் கீழே விழ, இருகரங்களும் சிரத்துக்கு மேல் குவிந்தன.

அன்று மாறிய அரசன் செங்கண்ணனின் மனநிலையைத் தான், பிற்காலத்து வந்த மகத மன்னனான அசோகனும் கலிங்கப்போரில், பெற்று உயர்ந்தான் என வரலாறு பேசும்.

வெறிபிடித்த வெற்றி வீரனான செங்கண்ணனை இரும்பொறையின் தியாகச் சாவு ஈடற்ற சிவபக்தனாக்கிவிட்டது. தனக்கு முதன முதலாக மனமாற்றத்தைத் தந்தருளிய ஆனைக்கா அண்ணலின் ஆலயம், அப்பெரு நிகழ்ச்சியின் நினைவுச் சின்னமாக அழகுற அமைக்கப்பட்டது.

கலிங்கப்போர் அசோகனது மனமாற்றத்துக்குக் காரணமானது, பரக்கப் பலபடச் சரித்திர ஆசிரியர்களால் பேசப்படுவது போல இரும்பொறையின் வீர மரணத்தால் செங்கண்ணன் மனம் திரும்பியதும், அது நாள் தொட்டுப் போர் வழியை மாற்றிச் சிவத்தொண்டனாகிய சேதியும் வரலாற்று நூல்களில் பேசப்படாதது ஒரு பெரும் குறையே!!

சேரமன்னனின் தன்மான உணர்ச்சியால் செய்த மகாத் தியாகம் பற்றிய சிறு குறிப்பு பழந்தமிழ் நூலாகிய புறநானூற்றில் உள்ளதை நன்கு ஆராய்ந்து விரிவாக விளக்க வேண்டியது வருங்காலச் சரித்திர ஆசிரியர்களின் முதற் கடமையாகும்.

எந்நாட்டிலும் வெற்றி பெற்ற அரசர்கள் தமது பெருமிதம் விளங்க வெற்றித் தூண்களோ, மண்டபங்களோ, அரண்மனைகளோ கட்டுவதுதான் இயல்பு. ஆதிகாலம் தொட்டே தமிழன் இதற்கு விதிவிலக்காக இருந்து வந்தான். தமிழ் அரசர்கள் எந்த நாளிலும் தமது சிறப்பைப் பிரபலப் படுத்த அரண்மனைகளையோ, வெற்றி மண்டபங்களையோ, ஜெயத் தம்பங்களையோ கட்டி வைக்கவில்லை. அதற்கு மாருகத் தமது வெற்றியைத் தேடித்தந்தவராகத் தாம் நம்பும் சிவபெருமானுக்குச் சிறப்பாகக் கோயிலெடுத்து வைத்தார்கள். "கங்கை கொண்டான்" "கடாரம் கொண்டான்" முதலிய தமிழ்நாட்டுப் பெருங்கோயில்கள் பண்டைத் தமிழரின் வெற்றிச் சிறப்பை மட்டுமல்லாது அவர்கள் பக்திச் சிறப்பையும் அடக்கத்தையும் உலகெலாம் காண இன்றும் தமது வானளாவிய கோபுரங்களைக்கொண்டு விளக்கிக் கொண்டிருப்பதைக் காண அறிஞர்கள் வியப்பெய்துகிருர்கள்.

தென்னகம் முழுதும் தன் திருவடிக்கீழ் அடங்க, சங்க காலப் பேரரசனுக விளங்கிய செங்கண்ணன் தமது மரபுவழி நின்று தமிழகமெங்கும் எழுபது சிவாலயங்கள் கட்டிமுடித்து அதன்வழித் தனது சிவபக்தியையும், வெற்றிச் சிறப்பையும், கலையார்வத்தையும் உலகறிய உணர்த்திஞன். திருமங்கையாழ்வார் என்னும் திருமாலடியார் தமது திருநரையூர் திருப்பதிகத்தில் அரசர்க்கரசனை கோச்செங்கண்ணன் ஐந்து விஷ்ணு கோயில்களும் எழுபது சிவன் கோயில்களும் கட்டிய சிறப்பைப் பாராட்டுகிருர். அவன் கட்டிய கோயில்கள் 'மாடக் கோயில்கள்' என்னும்

சிற்பவகையைச் சேர்ந்தன. யானை நுழையா வாயில்களை உடையன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் அவன் செய்த திருப்பணி இன்றும் அவன் புகழ் பரப்பியவாறு தமிழகம் எங்கும் விளங்குகின்றன. அத்தகைய கோயில்களில் அவன் முதன் முதலில் செய்தது திருவானைக்காத் திருப்பணியாகும். தனது பழம் பிறப்போடு தொடர்புடையதை அறிந்து கொண்ட சோழர் பெருமான் முன்ஜன்மத்தில் செய்து முடிக்க முடியாது சிலந்தியாக இருந்து முனைந்து முயன்ற அம்முயற்சி முழு வெற்றிபெற ஜம்புநாயகரின் திருக்கோயிலை அழகொழுகக் கட்டி வழிபாடு செய்தான். இத்திருக்கோயில் திருப்பணி செய்தோர்களைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய தொரு சிறுநூல் "திருவானைக்கா திருப்பணிமாலை" என்னும் பெயரால் உள்ளது. சென்னை கலா க்ஷேத்திரத்தில் திரு. உ. வே. சாமிநாதையர் அவர்கள் சுவடிகள் அடங்கிய நூலகத்தில் இன்றும் உள்ளது. அதில் மாமன்னனை கோச்செங்கண்ணன் ஆனைக்கா அண்ணல் ஆலயத்தின் திருச்சாலக் கண்டிகை மண்டபம், கோபுரம், தந்திபுகாத வாயில், மாடவீதி, பதினெட்டு சைவமடங்கள், எட்டுத் திக்கிலும் இருக்கும் இடபக்கொடி மரங்கள் முதலியவற்றை அமைத்ததாகச் செய்யுள் வடிவத்தில் கூறப்பட்டுள்ளது.

செங்கண்ணன், கடைசிவரைச் சிவத்தொண்டே குறிக்கோளாகக் கொண்டு நிறைவாழ்வு வாழ்ந்து கடைசியில் ஒரு மாசிமாதம் சதயநட்சத்திரம்கூடிய நன்னாளில் சிவஜோதியில் இரண்டறக் கலந்து விட்டான். தன்னிகரற்ற மாவீரனை விளங்கித் தமிழ் வழங்கும் தரணி முழுதும் தனது திருவடிக் கீழ் இருக்க ஆண்டும், தன்னுள்ளத்தில் தண்டமிழர் பெருந் தெய்வமான சிவபெருமானை மறவாத சிந்தையோடு வாழ்ந்த செங்கண்ணன் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவனைச் சிறப்பிக்கப்பட்டான். திருத்தொண்டத் தொகையும், பெரிய புராணமும் அவனை வாயார, மனமாரப் பாராட்டும் விதம் பேசினல் இதுமிக விரியுமென அஞ்சி இத்துடன் விடுவோம்.

## முத்தாரம் பெற்றது

செங்கண்ணன் மரபில் வாழ்ந்த சோழ மன்னர்கள் யாவரும் தமது குலதெய்வமாக ஆனைக்கா அண்ணலைக் கொண்டாடினர். உறையூர்ச் சோழர்கள் எவரும் நாள் தோறும் நாவற்காட்டீசனை வந்து வழிபட்டுச் செல்லத் தவறியதில்லை. சோழர்கள் என்றுமே சைவர்கள். அதனால் ஆனைக்காத் திருக்கோயில் நாள்தோறும் புதுப்பொலிவு பெற்று அழகழகாகத் திருப்பணி செய்யப்பெற்றுத் திகழ்ந்தது.

ஒருகாலத்தில் தேவர்களும், முனிவர்களும், வெண் விலங்குகளும், ஏனைய சீவராசிகளும் வணங்குப்படியாகத் தனித்தொரு நாவல் காட்டில் இருந்த சிவலிங்கத் திருமேனி வானளாவிய கோபுரங்கள், கலை நுட்பமிக்க மண்டபங்கள், தன்னிகரற்ற சுற்று மதில்கள், அழகிய வாவிகள், நறுமலர் நந்தவனங்கள் முதலியனவெல்லாம் நிறைந்த மாபெரும் கோயிலுள் திருவோலக்கம் கொண்டது. ஆயிரக்கணக்கான ஆலயசிப்பந்திகளும், நூற்றுக் கணக்கான சிவாசாரியர்களும் நாள்தோறும் ஆகம விதிப்படி நித்திய நைமித்தியங்கள் குறைவற நடைபெற வேலைக்கமர்த்தப்பட்டனர். காவிரியில் இருந்து நாள்தோறும் திருமஞ்சனம் கொணரப்படும். அமுதலிங்கேசப் பெருமான் பொன்னியின் புனித நன்னீரால் திருமுழுக்காட்டப்படுவது மரபாயிற்று. அப்பணிக்கெனத் தனியே சிவாசாரியர்கள் பலர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

பண்டைய நாளில் உறையூரில் வந்து வாணிபம் செய்வதை உலகத்தின் பல நாடுகளிலும் உள்ள வியாபாரிகள் ஒரு பெருமையாகக் கொண்டிருந்தனர். மிகச் சிறந்த பொருள் எதுவாயினும் அது உறந்தைக் கடைத்தெருவில் விற்கப்படுவதாகும். நமது பழைய நூல்களைப் பயிலும் போது நம் மனக்கண்முன் சித்தரிக்கப்படும் உறந்தைக் கடைவீதியைப் பற்றி எழுதிக்கொண்டு போனால், அதுவே மிக நீண்டதொரு கதையாகிவிடும். எனவே செய்திக்கு வருவோம்.

செங்கண்ணனுக்குப் பின் தமிழ்நாட்டை ஆண்டது ஒரு சோழமன்னன். அவன் அவைக்களத்துள் வெளிநாட்டு முத்து வணிகன் ஒருவன் வானத்து நட்சத்திரங்களைப் போல ஒளிவீசும் வெண்முத்து மாலையொன்றை ஏந்தி வந்தான். அழகான முத்துமாலை. அதை உரிய விலைகொடுத்து வியாபாரியிடமிருந்து வாங்கி அந்தப்புரமடைந்து அரசமா தேவியின் கழுத்தில் சூட்டி தன் ஆசைநாயகியின் அழகுக்கு அழகு செய்து மகிழ்ந்தான். மறுநாள் காலை தம்பதிகள் இருவரும் தலைநகரை அடுத்துத் தண்புனல் பரப்பும் பொன்னியின் நன்னீரில் புனலாடி மகிழ்ந்தனர். அரசி முன்னாள் தன் மணாளன் சூட்டிய முத்துமாலையைக் கழற்றாமலேயே மூழ்கிக் குளித்துக் கரைசேர்ந்தாள். அரசனும் திருமுழுக்காடி வந்தான். கரையேறியதும் கழுத்தில் இருந்த முத்தாரத்தைக் காணாது அரசி அலறினாள். விலை மதிப்பற்ற அவ்வணியை இழந்த அரசனும் பதறினான். உடனே ஆயிரக்கணக்கான ஆட்கள் பொன்னியின் தெள்ளிய நீரில் துழாவித் தேடலாயினர். கோடையானதால் காவிரியில் கொஞ்சம் தண்ணீரே ஓடியது. எனவே ஆட்கள் முனைந்து தேட முடிந்தது. பல ஆட்கள் தேடினர். பயனில்லை. அரச தம்பதிகள் வருந்தினர்.

இரண்டொரு நாட்கள் சென்றபின் இராணியோடு சோழமன்னன் ஆனைக்கா அண்ணலைச் சேவிக்க வழக்கம் போல் வந்திருந்தான். நண்பகல். உச்சிக்கால பூசை நேரம்.

அரச தம்பதிகள் தரிசிக்க அருகே வெள்ளிக் குடங்களில் கொணரப்பட்டு இருந்த திருமஞ்சனத்தை ஒவ்வொன்ருக எடுத்து சிவாசாரியர் சிவலிங்கத் திருமேனியில் அபிஷேகம் செய்துகொண்டிருந்தனர். முதல் குடம் முடிந்தது. இரண்டாம் குடம் ஆயிற்று. மூன்ரும் குடத்தை எடுத்துக் குருக்கள் ஊற்றும்போது பொன்னியின் புனிதத் தீர்த்தத்தோடு ஒளி மிக்கதொரு முத்தாரமும் பெருமான் கழுத்தில் ஆரம்போல விழுந்தது. திடீரெனச் சிவலிங்கத் திருமேனியின் மீது பளிச்சிடும் புத்தொளி கண்ட அரச தம்பதிகள் சற்றே கூர்ந்து நோக்கினர். ஆகா! அது அரசி உறையூர் நீராடு துறையில் இழந்த அதே முத்தாரமல்லவா! எப்படி அது இங்கு வந்து இறைவனின் திருவுருவை அலங்கரிக்கிறது? எல்லோரும் பிரமித்தனர். அரசன் தன் பிழையை உணர்ந்தான்.

சோழ பரம்பரை சைவத்தில் ஊறி எழுந்த ராஜவம்சம். வளவர்கள் தங்களிடமுள்ள எல்லாம் சிவார்ப்பணமாகத் தந்து விட்டுத் தங்களேயும் சிவபாத சேகரர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதில் சந்தோஷப்படுவார்கள் என்பது வரலாறு. இப்பெரு வழக்கத்திற்கு மாருக இவ்வரசன் மட்டும் தான் பெற்ற சிறந்ததொரு முத்தாரத்தை மனைவிக்குத் தந்ததன் மூலம் தவறு செய்துவிட்டான். அதை அறிவுறுத்தித் திருத்தவே ஆண்டவன் அவ்விளையாட்டை மேற்கொண்டான். குற்றமறிந்த அரசனும், அரசியும் கும்பிட்டுத் தம் பிழை பொறுக்க வேண்டினர். அம்மாலே அமுதலிங்கேசருக்கே அணிவிக்கத் தக்கதென, அர்ப்பணித்துச் சென்றனர். ஏழாம் திருமுறையில் இந்த நிகழ்ச்சியைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறி மகிழ்கிருர்.

## திருநீற்றன் மதில் திருப்பணி

தன்னிகரற்ற தலமான திருவானைக்காத் திருக்கோயிலுக்குத் தம்மாலான பணியைச் செய்வதைத் தமிழகத்து - ஏன் பாரதநாட்டு மக்கள் ஒவ்வொருவருமே தமது தலையாய கடமையாகக் கருதினர். சேர, சோழ, பாண்டியரும் ஏனைய மன்னர்களும் தம்மால் இயன்ற அளவு திருப்பணி செய்து கோயிலை மாபெருங் கோயிலாக்க முனைந்தனர். பணிசெய்ய முன் வருபவர்கள் யாவருக்கும் இறைவன் புறமதிலைத் தவிர மற்றவற்றையெல்லாம் கட்டி முடிக்கும்படி ஆணை இட்டான். ஆண்டவனின் அசரீரி வாக்குப்படியே ஆலயப்பணி நடைபெற்றது. நான்கு சுற்று மதில்களும், அதனுள் மண்டபங்களும் கோயில்களும் ஏனைய ஆலய உறுப்புகளும் அழகுற அமைந்து முடிந்ததும் எம்பெருமான் இவ்விடத்தின் மேல் தனக்குள்ள அலாதியான விருப்பத்தை விளக்க விரும்பித் தானே ஒரு சிவஞான சித்தராகத் திருவுருவம் ஏற்று வந்தார்.

திருக்கோயில் திருமதில்கள் மனித உடலின் புறத் தோற்றத்தைக் குறிப்பன என மெய்ஞ்ஞான நூல்கள் பேசும். சைவ ஆகமப்படி சிவாலயங்கள் மனித சரீர அமைப்பை விளக்குவன. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம். வள்ளல் சிவனார்க்கு வாய்க்கோபுர வாயில், தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் கள்ளப்புலன் ஐந்தும் காளா மணிவிளக்கு" என்பது திருமந்திரம். மனித

உயிருக்குள் உயிராக விளங்கும் சிவபெருமானைச் சிவலிங்கத் திருவுருவம் குறிக்கும். அதைச் சூழ்ந்துள்ள கோயிலின் மதில்கள் ஒன்றன்பின் ஒன்ருக ஆனந்தமயகோசம், விஞ்ஞான மயகோசம், மனோமயகோசம், பிராணமயகோசம், அன்னமய கோசம் என ஐந்து வகைப்படும். மானுட யாக்கையின் முழுமையைக் காட்டும் அன்னமயகோசத்தைக் குறிக்கும் கோயிலின் ஐந்தாம் திருச்சுற்று மதிலை ஆண்டவன் தானே எடுக்க விரும்பியது, மனித வாழ்வில் ஆண்டவன் கொண்டுள்ள பங்கை உணர்த்தவேயாகும்.

மதுரை மாநகரில் வந்து அட்டமா சித்திகள் செய்து பிரமிக்க வைத்த மகாதேவனே ஆனைக்காவிலும் ஒரு சிவஞான சித்தராகத் தோன்றினர். பொன்னும், மணியும், காசும், பணமும் இன்றிக் கையில் எடுத்த திருநீற்றினலேயே செய்தற்கு அரிய பெரும் பணியைச் செய்ய முனைந்துவிட்டார். ஐந்தாம் திருச்சுற்று மதில் வேலை ஆரம்பமாகியது. பல்லாயிரக் கணக்கான கொத்தர்களும், தச்சர்களும், கொல்லர்களும் வேலை செய்ய வந்தார்கள். சிற்ருட்கள் எண்ணற்ரேர் பணிபுரிந்தனர்.

அரையில் சிறு கோவணமும் கையில் திருநீற்றுப் பையுமே கொண்ட சித்தர் அத்தனை பேரையும் வேலை வாங்கினர். அதுமட்டுமன்று அவரவர் செய்த பணிக்கேற்பக் கூலியும் கொடுத்து வந்தார். ஒவ்வொரு நாளும் வேலை முடிந்து மாலை வீடு திரும்புமுன் சித்தரிடம் விடைபெறச் செல்லும் பணியாளர்களிடம் தமது திருநீற்றுப் பையிலிருந்து சிறிதுவிபூதியை அவர்கள் கரத்திலிடுவார். வாங்கிய அளவில் தாம் செய்த பணிக்கேற்பக் கூலிப்பணமாக அது மாறித் தம்

கரத்திடைக் கிடப்பதை அவர்கள் வியப்போடு கண்டு மகிழ்வோடு வீடு திரும்புவார்கள். இப்படியாகத் தென்னகத்தில் மிக்க அழகானதொரு புறமதிலைத் திருவானைக்காத் திருக்கோயில் பெற்று முழுப்பொலிவோடும் விளங்க வைத்துவிட்டுச் சித்தராக வந்த சிவபெருமான் மறைந்தார். இக் குறிப்பைத் தமது திருத்தாண்டகத்தில் திருநாவுக்கரசர் "சித்தாயவேடத்தாய்" என்று மறவாமல் குறிப்பிட்டு மகிழ்கிறார். 8000 அடி நீளமும் 5 அடி 6 அங்குலம் அகலமும் - உள்ள அற்புதமான திருமதில் 32 அடி உயரத்தில் இன்றும் விளங்குவது காணலாம்.

## பூசகர் செருக்கடக்கியது

மூப்போதும் திருமேனி தீண்டி முறைப்படி சிவபூசை புரியும்வாய்ப்பினும் இவ்வுலகில் கிடைத்தற்கரிய பெரும்பேறு ஏதும் இல்லை என்பது நம் முன்னோர்கள் முடிபு. சேக்கிழார் பெருமான் தொகை அடியார்களாக இவர்களைக் குறிப்பிட்டுச் சிறப்பாகப் போற்றி மகிழ்வார். தில்லையில் ஆடவல்ல பெருமானைத் தீண்டி அனுதினமும் பூசிக்கும் பேறுபெற்ற தீட்சதர்கள்போலவே திருவானைக்காவிலும் ஒரு சிவாசாரிய பரம்பரை இருந்தது. அருமறை ஆகமம் முதலிய அருள் நூல்களில் அவர்கள் தன்னிகரற்ற பயிற்சி பெற்றிருந்தார்கள். இருமொழியிலும் தக்க புலமை பெற்று விளங்கினர்கள். அத்தோடு அயனும் அரியும் அறியாத அமுதலிங்கப் பெருமானை முடிதொட்டு முப்போதும் திருமுழுக்காட்டி, விரும்பியபடியெல்லாம் அலங்கரித்துப் பூசிக்கும் கிடைத்தற்கரிய பேறு பெற்றிருந்தார்கள். அதுமட்டும் அல்லாமல் அரசனும், அடியார்களும் அள்ளிக் கொடுக்கும் பொருட் செல்வத்திலும் குபேரர்களாக இருந்தார்கள். இத்தனைச் சிறப்புக்களும் எய்தப் பெற்றவர்களுக்கு இறுமாப்பு எழுதல் இயல்புதான். எனினும் சிவனடியார்களுக்கு இது தகுமா? ஆணவம் ஏனையோருக்கு எழுந்தால் அரசன் தண்டித்து ஒடுக்கலாம். அறநெறியைப் போதிக்க வந்த அந்தணர்களுக்கே அந்த நோய் வருமெனில்

அதைத் தீர்க்க யாராலாகும்? வானுலக மருத்துவனை வைத்திய நாதனே வந்தால் தானே அப்பிணி அகலும்! எனவே ஆனைக்கா சிவாசாரியர்களின் ஆணவத்தை ஒடுக்க ஆண்டவனே வரவேண்டியதாகி விட்டது.

வடதிருக் காவேரியான கொள்ளிடத்தின் வடகரையில் திருவானைக்கா சிவாசாரியர்களின் உறவினர் பலரும் இருந்தனர். தம்மவர்களான அவ்வந்தணர்களின் வீட்டு விசேடங்களுக்கு எல்லாம் திருவானைக்காவிலிருந்து பரிசல் மூலமாக ஆற்றைக் கடந்து சென்றுவருவது வழக்கம். அந்த நாளில் கொள்ளிடம் மிக ஆழமும் அகலமுமான பெருநதியாக இருந்தது.

ஒருநாள் எதிர்க்கரை கிராமமொன்றில் உள்ள அந்தணர் ஒருவர் இல்லத்தில் விசேஷம். நண்பகல் பூசையைக் கவனிக்குமாறு சிறு பையன் ஒருவனை மட்டும் இருத்திவிட்டு ஆனைக்கா அந்தணர் குடும்பங்கள் அனைத்துமே வடகரைக்குக் கிளம்பிக் கொள்ளிடக் கரைக்கு வந்துவிட்டது. நதியில் பயங்கரமான வெள்ளம். அழகான பரிசல் ஒன்றோடு ஒரு வாலிபன் பரிசல் துறையில் அவர்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தான். வடகரையில் அத்தனை பேரையும் ஆற்றைக் கடந்து பரிசலில் ஏற்றிச் செல்ல ஒப்பங்கூறி ஏற்றிக் கொண்டான். பரிசலும் நகர்ந்து நட்டாற்றுக்கு வந்தது. அந்த நேரத்தில் ஒரு பெரும் சுழல்காற்று பேய்போல வீசியது. பரிசல் ஓட்டி பரிகாசமான ஒரு சிரிப்போடு நின்றான். பச்சிளங் குழவிகள் மழைத் தண்ணீரில் விடும் காகிதக் கப்பலைப் போல் பரிசல் குப்புறத் தண்ணீரில் கவிழ்ந்தது. ஆண், பெண், குழந்தைகள் எல்லோரையும் அப்பயங்கர வெள்ளம் விழுங்கி ஏப்பமிட்டு விட்டு எக்காளமாகச் சிரித்துக்கொண்டே சென்றது. ஆணவம் அகம்பாவம், திமிர் இவற்றின் முடிவு "இதுதான்" என்று அந்த பயங்கர நிகழ்ச்சி உலகிற்கு உணர்த்திக் கொண்டிருந்தது.

அப்பெருங்குலம் அடியோடு அழிவதை விரும்பாத ஆண்டவன் அசரீரியாய் ஆணையிட அதன்படி அழிவைத் தேடிச் சென்ற அந்தணர்கள் விட்டுச் சென்ற ஒரே சிறுவனைப் பூசகனுக்கி அவனுக்குத் துணைக்காக அண்மையில் உள்ள திருப்பறியலூர் சிவாசாரியர்களை அழைப்பித்து குடியமர்த்தி ஒழுங்கு செய்யப்பட்டது. இதன் மூலம் தன் முனைப்பு, திமிர், ஆணவம் முதலிய துர்க்குணங்கள் உடையோர் எந்தவித உயர்குலத்தவராயினும் எவ்வளவு கல்வியறிவு உள்ளவராயினும் அறத்தின் கொடுங்கரத்தால் அழித்து ஒழிக்கப் படுவார் என்பதை உலகம் உணரத்தலைப்பட்டது.

## அடியார்களும், புலவர்களும்.

தமிழ் நாட்டில் சிவன் கோயிலில்லா ஊரேயில்லை. இதுவே தென்னகத்தின் சிறப்பாகப் பேசப்படுகிறது. அவற்றுள்ளும் மூவர் முதலியவர்களில் யாரேனும் வந்து தரிசித்துச் சென்ற தலங்கள் மிக்க சிறப்புடையன. அதிலும் மூவருமே வழிப்பட்ட தலமாயின் அதன் சிறப்பு அளப்பரியது. திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரின் தெய்வ வாணி படிந்த திருத்தலத்தின் பெருமையைப் புலவர்கள் புராணங்களாய்ப் பாடித்தான் காட்டவேண்டும். அவை உலகத்திலேயே தன்னிகரற்றவை என்பர். ஆனைக்கா அண்ணல் நால்வர் நற்றமிழாலும் அணிசெய்யப் பெற்று விளங்கும் சிறப்புடையவர். தற்சமயம் நூல்களில் பல கிடைத்திலதெனினும் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் வாக்குப்படி இப்பெருமான் தமிழ் பாவகை யாவற்றாலும் சிறப்பிக்கப் பெற்றவர் எனத் தெரிய வருகிறது. மேலும் மிகப் பழமையான தலபுராணம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. அறுமுகனை அகங்கனியப் பாடும் அவாவில் தமிழகமெங்கும் உலாவிய அருணகிரிநாதர் இத்தலத்துக் கோயிலுள்ள முருகனை மட்டுமின்றித் தென்கிழக்கேயுள்ள ஜம்பு தீர்த்தக் கரையின் கீழ்புறம் படித்துறையில் யுத்த சன்னத்தராக வில்லேந்தி நிற்கும் வேலனையும் பாடி மகிழ்ந்த பெருமை இவ்வூரின் சிறப்பு. கவி காளமேகம் திருவானைக்கா உலாவில் நம் பெருமானைப் பாடி மகிழ்ந்துள்ளார்.

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மாபாடியம் தந்த சிவஞான முனிவரின் மாணவர் கவிராட்சசன் எனப்படும் கச்சியப்ப முனிவர் பிற்காலத்தில் இலக்கியச் சுவைமிக்க திருவானைக்கா தலபுராணம் பாடியுள்ளார். சிவஞான சித்தியாரின் பழைய உரைகாரர்களில் ஒருவரான காவை அம்பலவாணத் தம்பிரான் ஆனைக்காவில் இருந்தவர். மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் தலை மாணவர் எனப் போற்றப்பட்ட பெரும் புலவர் பூவாளூர் திரு. தியாகராசச் செட்டியார் அவர்கள் பலகாலம் ஆனைக்கா வாசியாக வாழ்ந்த பெருமை இவ்வூருக்கு உண்டு. மேலும் புதுமை இலக்கியமான காவை முருகன்-பிள்ளைத்தமிழ் பெற்ற பால தண்டாயுதபாணி தமிழ் இலக்கிய உலகுக்குப் புதுமைப் புலமையின் பங்கையும் தந்து அழகுக்கு அழகு கூட்டுகிறார். இப்படியாக அடியார்கள் பலர் வரவாலும் செந்நாப் புலவர்களின் செய்யுள் நலத்தாலும் பல்லாயிரம் வருடங்களாகத் தன் பெருமை சிறிதும் குன்றாது இச்சிவத்தலம் விளங்குகிறது.



# தாய் வழிபாடு

தாய் வழிபாடு தமிழினத்தின் தலையாய பண்புகளில் ஒன்று. கடவுளை அன்னையாகப் பெண்ணுருவில் வழிபடும் வழக்கம் தமிழ்நாட்டில் வெகுகாலமாக இருந்து வருகிறது. கிராமத் தேவதைகள், எல்லைப்பிடாரிகள், வீட்டுத் தெய்வங்கள், மாரியம்மன், காளியம்மை முதலிய பழைய காலத் தமிழர்களின் பெண் தெய்வ வழிபாடு இன்றும் சிறப்பாக நடைபெறுவது கண்கூடு. பத்தினித் தெய்வத்தை நம்மவர்கள் வழிபட்ட விதத்தைப் பற்றிச் சிலப்பதிகாரம் விரிவாகக் கூறுகிறது. எனினும் சமய வளர்ச்சி பெற்று திருக்கோயில்கள் எழுந்த பிற்காலத்தில் அம்மன் கோயில்கள் பெரும்பாலும் சுவாமி கோயிலின் சுற்றுத் தெய்வங்களில் ஒன்ருகவே கருதப்பட்டு வந்தது. அம்பிகை ஈசனின் திருவருளின் உருவம் என்றே சமயத் தத்துவ நூல்கள் பேசுகின்றன.

இருந்தாலும் ஒருசில இடங்களில் அம்மையின் சன்னதி முக்கியத்துவம் பெற்று விளங்குவதுண்டு. உதாரணமாக மதுரை, காஞ்சீபுரம். அதுபோல திருவானைக்கா அம்பிகையின் சன்னிதி மற்ற எல்லாவற்றிலும் முக்கியமானதாக வழிபடப் பெறுகிறது. இங்கு அகிலாண்டநாயகியின் திருக்கோயிலில் வழிபட வருமளவு பக்தர்கள் அப்புலிங்கநாதரின் சன்னிதிக்கு வருவதில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. பொதுவாக நம்நாட்டில் சாக்தம் சிறப்புற விளங்குமிடம் வங்க தேசமேயானுலும் தென்னகத்திலும் அதனைப் பாங்குற வழங்கச் செய்த பெருமை ஆதிசங்கர பகவத் பாதாச்

சார்யாரையே சாரும். அவரது வழிபடு தெய்வம் சாரதை அல்லது காமாட்சியாக அமைந்ததால் சவுந்தரிய லகரி முதலிய அம்மை வழிபாட்டுத் தோத்திர நூல்களைச் சங்கரர் வடமொழியில் செய்தளித்தார். அவர் மதத்தை அனுசரிக்கும் அத்துவிதிகளான சுமார்த்தர்கள் தாய் வழிபாட்டில் ஈடுபட்டனர். அவ்வழி தனக்கே உரித்தானதொரு முறையில் தென்னாட்டுச் சாக்தமாக வளரலாயிற்று. பிற்காலத்து வந்த அபிராமி பட்டர் முதலிய சக்தி உபாசகர்கள் மேலும் மேலும் அதற்கு வலிவூட்டி வளர்த்து நிலைபெறச் செய்து விட்டனர். இதில் திருவானைக்கா அகிலாண்டநாயகியின் சன்னிதி கணிச மானதொரு பெரும் பங்கு பெறுகிறது. ஆனைக்கா அம்பிகை யின் இன்னருள் பெற்ற பதினெட்டாம் நூற்றாண்டின் மிகப் பெரிய தத்துவ ஞானியான தாயுமானவ சுவாமிகள் "சாக்தம்" இந்து மதத்தின் எண்ணில் அடங்காதுள்ள ஏனைய பிரிவுகளை எல்லாம் இணைத்துப் பிணைக்கும் ஒரு சரடு போல விளங்குகிறது என்று தனது நூல்களில் பேசுகிறார்.

கன்னியாகவே இருந்து கண்ணுதலைப் பூசிக்கும் தாய் அகிலாண்டநாயகி ஆதியில் மிக உக்கிரமான சக்தியாக இருந்தாள். பூசிப்பவர்களும் கூட உட்புக அஞ்சி கோயில் வெளிக்கோபுரத்தின் வாசலருகே இருந்து நித்திய பூஜைகளை முடித்துச் செல்வது வழக்கம். நான்கு திருச்சுற்றுக்குள் எவரும் தங்குவதில்லை சுவாமியைத் தரிசித்ததும் வெளியேறி விடுவது மரபு. அம்மையின் கோபத் தழல் குறையுடையாரைக் கொன்றுவிடும் என்ற பயம் எங்கும் நிலவிய காலம் அது. காலடி தோய்ந்த இடமெல்லாம் வேதாந்த மணம் கமழக் காலடியிலிருந்து கிளம்பிய சங்கரர் பாரதநாட்டுத் தலங்கள் தோறும் சென்று வழிபட்டு வடமொழியில் பாமாலை சூட்டி வரும் சமயம், ஆனைக்கா அண்ணலைச் சேவித்த அவரிடம் அவ்வூர் மரபு கூறப்பட்டது. இரவு நேரத்தில் நான்கு திருச் சுற்றுக்குள் எவருமே இருப்பதில்லை என்ற செய்தி அறிந்த ஆதிசங்கர பகவத் பாதாச்சார்யார் மனம் துணிந்து அன்று இரவு ஆலயத்துக்கருகே வடக்குத் திருச்சுற்றில் தங்கினார்.

துர்க்கையாக வெளி வந்துலவும் தாயின் பயங்கர உருவினைத் தரிசித்தார். தாயின் கோரமான உருவைத் தயாவுடைய கருணை மூர்த்தமாக்கி உலகுக்கு உதவ எண்ணினர். இரண்டு ஸ்ரீ சக்கரங்களைத் தயார் செய்து அதில் அம்பிகையின் தெய்வீக சக்தி முழுவதையும் தன் தவ வலிமையால் வந்து குடிபுகும்படி வேண்டினர். அம்மை தன் பக்தனுடைய வேண்டு கோளின்படி தனது மூர்த்திகரத்தை ஸ்ரீ சக்கரத்தினுள் இருக்கக் கொடுத்தாள். சங்கரர் அவ்விரண்டு சக்கரத்தையும் இரு தோடுகளாக்கித் தாயின் காதுகளில் அணிந்து மகிழ்ந்தார். மேலும் தாயின் உக்கிரசக்தி, வழிபட வரும் பக்தர்களைத் தாக்காத வண்ணம் அம்பிகைக்கு எதிரில் அவள் மூத்த பிள்ளையான விநாயகரை ஸ்தாபித்தும் பின்புறம் இளைய நாயனரான முருகப் பெருமானை இருத்தியும் உதவினர். உலகினுக்கு அவர் செய்த உதவியின் அறிகுறி யாக இன்றும் அம்பிகை சன்னதியிலுள்ள பிள்ளையார் கோயிலில் சங்கர பகவத் பாதாச்சார்யாரின் திருவுருவப் படிவம் உள்ளதைக் காணலாம். நாலாம் பிரகாரம் வடக்குத் திருவீதியில் அவர் தங்கிய அந்த இடத்தில் அமைந்த சங்கர மடம் இன்றும் உள்ளதையும் காணலாம்.

அம்பிகையின் இரண்டு காதுகளிலும் காதணியாகச் சொலிக்கும் ஸ்ரீ சக்கரங்கள் காண்பார் மனத்தை ஈர்ப்பன. அதன் தெய்வீக ஒளி இன்றும் நமது ஊனக் கண்களுக்கும் பிரத்யக்ஷம். வேறு எந்த அம்பாள் சன்னிதியிலும் இல்லாத தொரு புனித ஒளி அதுவாகும்.

சங்கரர் அகிலாண்டநாயகி பேரில் பாடிய அக்ஷர மாலிகை என்னும் மாத்ருகா புஷ்ப மாலிகா அவர் செய்த தோத்திர நூல்களிலேயே ஒரு புதுமையைக் காட்டுவது. இன்றும் அகிலாண்டேஸ்வரி கோயிலில் சங்கராச்சார்யார் மடத்துக்கு மற்ற கோயில்களில் இல்லாத சில சலுகைகள் உண்டென்பர்.

மேலும் நாயக்க மன்னர்கள் காலத்து வாழ்ந்த ஐயர்களுள் ஐயர் ஸ்ரீ கண்ட தீக்ஷிதர் என்னும் சக்தி உபாசகர் சுந்தர பாண்டியன் கோபுரத்தருகிலுள்ள ஏகாட்சரி அம்மன் அருளால் பல அற்புதங்கள் செய்து பிரபலமாக விளங்கிய வரலாறு ஒன்று உண்டு. அவரும் அவர் பரம்பரையினரும் ஆனைக்கா கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளமை செப்புப் பட்டயங்களாலும் கல்வெட்டுக்களாலும் தெரிய வருகிறது.

# மோகனாங்கி

திருவாதிரை வருவதற்கு முன் ஒருநாள் மார்கழி மாதத்திய அதிகாலை ஜம்புநாயகரின் சன்னதியில் உருத்திர கணிகையர் அணிவகுத்து நிற்கிறார்கள். திருப்பள்ளி எழுச்சி பூஜை நடைபெறுகிறது. அன்று மோகனாங்கியின் முறை. பூபாளத்தில் "உங்கையில் பிள்ளை" என்ற திருவெம்பாவையை அழகாக இசைக்கிறாள். பக்தர்கள் மனம் ஒன்றி திருவாசகத்தின் பொருளிலும் இசையிலும் கட்டுண்டு மெய்ம்மறந்து சன்னிதியில் நிற்கிறார்கள். "என் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க! எங்கை உமக்கல்லாது எப்பணியும் செய்யற்க!" என்ற பகுதியை மிக உருக்கமாகப் பாடிக் கொண்டிருக்கும் போது சன்னிதியில் இருக்கும் அத்தனை உருத்திர கணிகையரும் "களுக்" எனச் சிரிக்கிறார்கள். எள்ளிச் சிரிக்கும் தம் தோழியரின் கருத்தறிந்த மோகனாங்கி துணுக்குற்று அத்துடன் பாடலை நிறுத்திவிட்டு "விருட்" டென்று வீடுநோக்கிச் சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டு தேம்பித் தேம்பி அழத்தொடங்கிவிட்டாள். பகல் பொழுது கழிந்து முன்னிரவும் கூட வந்து விட்டது.

மடைப்பள்ளி வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு வடக்குத் திருவீதியில் இருக்கும் தன் ஆசை நாயகியின் வீட்டுக்கு, அம்மன் கோயில் சமையற்காரனான வரதன் அவசர அவசரமாக வந்து வாயிற் கதவைத் தட்டினான்; பதிலில்லை. கதவும் திறக்கப்படவில்லை. காதலி மோகனாங்

கியின் விசும்பல் தான் கேட்டது. காமக் கிழத்தியின் நிலையை அறிந்து அவன் மனம் பதறியது. "என்ன நிகழ்ந்தது? எதற்காக அழுகிருய்? உன் கவலையை நீக்க நான் எது வேண்டினும் செய்யத் தயாராய் இருக்கின்றேன்! வந்து வாசல் கதவைத் திறந்து என்னிடம் நடந்ததைக் கூறு" என்று வரதன் வெளியிலிருந்து கூவினன். மோகனங்கி கதவைத் திறக்கவில்லை. உள்ளிருந்து கொண்டே பேசினள், "உருத்திர கணிகையான நான் வைணவ பார்ப்பனனுகிய உன்னேடு உறவுகொள்ள இயலாது. கூடா ஒழுக்கத்தால் என்னைச் சன்னிதியில் தோழிகள் கேலி செய்து எள்ளி நகையாடும்படியாகிவிட்டது.." அது கேட்டதும் வரதன், "உனக்காக நான் எதுவாயினும் செய்கிறேன் என்றேனே?" என்று தன் மனநிலையை வலியுறுத்தினன். மோகனங்கி காமப் பரவசனுகை அவன் கூறியதை நம்பவில்லை. இரவு முழுதும் அவன் தெருவாசலில் நின்று கேட்க, வீட்டுக்குள் இருந்து சைவ சமய உண்மைகளை எல்லாம் உபதேசித்தாள். மறுநாள் உதயகாலத்தில் சிவ தீட்சை கொடுத்துச் சைவனுக்கித் தன் வீட்டினுள் புகவிட்டாள் என வரலாறு பேசும். அந்த நாட்களில் சிவத்தொண்டு செய்யவென்று தம்மை அர்ப்பணித்துக் கொண்ட கன்னிப் பெண்களே உருத்திர கணிகையர் எனப்பட்டனர். வேசையர் அவர்களினின்றும் வேறுபட்டவர்களாவர். எனவே மோகனங்கி வரதனுக்கு சிவஞான உபதேசம் செய்ததும் சிவ தீட்சை கொடுத்ததும், அந்நாள் நடக்கக் கூடிய நிகழ்ச்சியே என அறிக. பிற்காலம் அவர்கள் நிலை மிக இழிந்து விட்டது நம் நாடு செய்த தவக் குறையே.

அதன் பிறகும் சைவனன வரதன் அகிலாண்டநாயகி திருக்கோயிலில் மடைப்பள்ளியில் தொடர்ந்து சமையல் வேலை செய்துகொண்டு வந்தான். மோகனங்கியும் அவனேடு இணைந்து வாழ்ந்து வந்தாள்.

## காளமேகம்

வேண்டுவார்க்கு வேண்டியதெல்லாம் அளிக்கும் பெருங் கருணையே உருவானவள் அகிலாண்டவல்லி. மற்ற சிவன் கோயில்களில் உள்ள அம்பிகையின் திருவுருவம் போல அல்லாது கரங்கள் இரண்டில் தாமரையும் மற்றிரண்டும் அபய வரதமுமாக திருமகள் உருவில் காட்சி தருபவள் எந்தாய். ஆறடி உயரத்தில் எடுப்பான தோற்றத்தோடு சிற்ப நுணுக்கங்கள் அத்தனையும் அமைந்தது அம்மையின் தோற்றம். எம்பெருமான் ஜம்பு நாயகரான ஆதி குருமூர்த்தியையே தனது ஆசிரியனாகக் கொண்டு இன்னும் சிவஞானம் பயின்றுவரும் தெய்வீக மாணவி அவள். ஞானத் தேட்டத்தில் திருமணத்தைக் கூட மறந்துபோன கன்னித்தாய்; அவளை உபாசித்து இன்னருள் பெற்றவர்கள் மிகப்பலர்; ஞான லெட்சுமியாக விளங்கும் எந்தாயை இஷ்ட தெய்வமாகக் கொண்டு தொழுதவர்கள் தன்னிகரற்ற புலவர்களாக விளங்குவது இயல்பு. இந்த உண்மையறிந்த வேதியர் ஒருவர் தான் இவ்வுலகத்தில் ஈடில்லாத புலவனாக வேண்டும் எனும் பேரவாக் கொண்டதால் தாய் அகிலாண்டநாயகியின் கோயில் முதல் சுற்றுப் பிரகாரத்தில் தனியே ஆசனம் அமைத்து அமர்ந்து கடுந்தவம் புரிந்து வந்தார். சாக்த தந்திர சாத்திரங்கள் சாற்றும் முறை வழுவாது அல்லும் பகலும் ஆலயத்திலேயே, அன்ன ஆகாரமின்றி யோகு செய்திருந்தார். பல ஆண்டுகள் தியானத்திலேயே சழிந்து போக ஒருநாள் ஞானத்தாயான அகிலாண்டநாயகி பக்தனின் பக்குவம் உணர்ந்து அருள் புரிய எண்ணினாள். அன்று முன்னிரவில் அம்பிகை கோயில் அர்த்தசாம பூசை

முடியும் தறுவாயில் ஆராதனைக்கு வேண்டிய அமுதினைத் தயார் செய்து கொணர்ந்து அர்ச்சகரிடம் கொடுத்துவிட்டு சுயம்பாகி வரதன் கோயில் படிக்கட்டில் தலையை வைத்துத் தூங்கத் தயாராகிக் கொண்டிருந்தான்.

இரவுப் பூசைக்குத் திருமுறை பாடி அபிநயம் பிடிக்கும் அன்றைய முறைக்காரி மோகனாங்கி தன் காதலன் தூங்கப் போவதைக் கண்டுகொண்டு வீட்டுக்குச் செல்லப்பணித்தாள். பொழுதெல்லாம் மடைப்பள்ளி வேலையில் ஈடுபட்டு உடம்பு சோர்ந்த சுயம்பாகி வரதன், அவளிடம் தான் சற்றே சிறு துயில் கொள்ளுவதாகவும், அவள் வேலை முடித்து வீடு திரும்பும்போது தன்னையும் தட்டி எழுப்பி அழைத்துச் செல்லும்படியும் கூறிவிட்டுத் தூக்கத்தில் ஆழ்ந்து போனான்.

அன்று ஏனோ அர்த்தயாம பூசைக்குச் சற்றே நேர மாயிற்று. பூசை முடிந்ததும் கோயில் நிர்வாகிகள் படபட வெனக் கதவுகளைத் தாளிடத் தொடங்கினர். மோகனாங்கியும் போகும்அவசரத்தில் தன்ஆசைநாயகனைமறந்து வீடேகினாள். தனி மோனத் தவத்தில் ஆழ்ந்திருக்கும் அந்த அந்தணரும் தன்னை மறந்த பெரும் தூக்கத்தில் லயித்துவிட்ட வரதனும் கோயிலுக்குள்ளேயே இருந்துவிட்டார்கள்.

நட்ட நடுநிசி; பயங்கரமான அமைதி எங்கும் நிலவும் நேரம்; கோரமான இருள் கோயிலெங்கும் கவிந்து மூடிக் கொண்டிருக்கும் போது; மெல்லக் கருவறையின் கதவுகள் தானே திறந்து கொண்டன. காரிருளில் ஆழ்ந்திருந்த கற்பக்கிரகத்தில் ஒரு பேரொளி! விவரிக்க முடியாத அருட்ஜோதி அது. அம்பிகையின் திருவுருவை மட்டும் தெளிவாகக் காட்டும் கோடி சூரியப் பிரகாசம்! தேவியின் திருவுருவம் தெளிவாகத் தெரிகிறது. கற்சிலை கணநேரத்தில் கற்பனை கடந்த கடவுளின் அருட்திரு மேனியாக மாறுகிறது. சொல்லுக்கு அடங்காத பேரழகே உருவாக எந்தாய் அகிலாண்டநாயகி கருவறையிலிருந்து வெளிவருகிறாள்!

தலையிலே வைரக்கிரீடம்! குழலிலே முல்லைச்சரம்! மார்பில்படிக மணிமாலைகள்! அத்துடன் வெண்தாமரைமாலை! இடையிலே வெண்பட்டாடை! கால்களில் வெள்ளிக் கொலுசுகள்! ஒரு கரத்திலே மகரயாழ்! இத்தனை அணிகளும் அழகு செய்ய மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்துக் காரிருள் சூழ்ந்த கருவறையைவிட்டு வெளி வருகிருள் பதினறு வயது பாலையாக எந்தாய் பரமேசுவரி. அன்று தன்னிடம் புலமை கோரித் தவம் புரியும் வேதியனுக்கு அருள்புரிய வேண்டிய நன்னுள். எனவே தன்னை ஞான வாணியாக — சரசுவதியாக உருமாற்றிக் கொண்டுவந்து இன்னருள் செய்ய எண்ணி விரைந்தாள் அன்னை அகிலாம்பிகை.

மெல்ல மெல்ல நடந்து வேதியன் எதிரில் போய் அன்னை காட்சி கொடுத்தாள். அன்னையின் வேதச் சிலம்பொலி கேட்டு தவம் கலைந்த சத்தி உபாசகன் மெல்லக் கண்ணைத் திறந்து பார்த்தான். தன் எதிரே வாய் நிறைய வெற்றிலைபாக்குடன் புன்னகை புரியும் வீணுதாரிணியான தாயைக் கண்டான். பன்னுள் தவம் புரிந்தும் பல நூல்களைப் பயின்றும் பக்குவப் படாத அவன் மனத்தில் உண்மை விளங்கவில்லை. யாரோ பெண் தன்னை மயக்கி வசப்படுத்திக் காமக் களியாட்டம் புரிய வந்துள்ளதாகத் தோன்றியது. துர்ப்பாக்கிய வசத்தால் "சீ தூரப்போ" என்று சினந்து கொண்டு புறம் போனுன். அன்னை அவன் அறியாமையை எண்ணி ஏளனமாகச் சிரித்துக் கொண்டே மேலும் நடந்தாள். கருவறையைச் சுற்றிய திருச்சுற்றை மெல்லச் சுற்றி வந்தாள். பெண்ணைப் "பேய்" என்றும், பிசாசு என்றும் கூறிப்போன இடைக்காலத்து ஆண்டிகளின் அசிங்கமான பேச்சுக்களை அறவுரை எனக் கொண்டு விட்ட வேதியன் விதிவசத்தால் கண்களை இறுக மூடிக்கொண்டு எட்ட நகர்ந்தோடி விட்டான். அவன் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்! ஊழ் வலியை எண்ணி வாயிற்படியில் கால்வைத்த எந்தாய் ஒருகணம் தாமதித்து நின்ருள். வாய்த் தம்பலத்தைக் காறித் "தூ" எனத்

T. 15985



துப்பினள். கருவறைக்குள் மறுகணம் நுழைந்துவிட்டாள். கதவுகள் தாமே மூடிக்கொண்டன. மீண்டும் கற்சிலை காரிருளில் கற்பக் கிரகத்தினுள் ஒன்றும் தெரியாதது போல நின்றுகொண்டிருந்தது. எல்லாம் ஒரு கனவுபோல சில மணித்துளிகளில் நிகழ்ந்து முடிந்துவிட்டது. அன்னை துப்பிய தம்பலம் வாயிற்படியிலே தலைவைத்து தன்னை மறந்து நெடுந்துயில் புரியும் வரதனின் பிளந்த வாயில் தெறித்து விழுந்தது. அது என்ன சாதாரண எச்சிலா? வாயினுள் விழுந்த அவ்விண்ணவர்கள் காணு அருள் அமுதினைத் தூக்கக்கலக்கத்தில் ஏதோ என்று அச்சுயம்பாகி விழுங்கிவிட்டான். அவ்வமுதம் அகம் புகுந்த அக்கணமே துயில் கலைந்தது! வரதன் புதியவனாக எழுந்து விட்டான்! அவனை அறியாமலே அவனுள் ஊற்றெழுந்த கவிதை வெள்ளம் காட்டாற்று வெள்ளம் போலப் பாய ஆரம்பித்து விட்டது! விடியுமட்டும் ஒரே கவிதைப் பிரவாகம்! அவன் பாடிக்கொண்டே இருந்தான்.

அந்தப் பாடல்களில் தான் எத்தனை இனிமை! எவ்வளவு ஒழுங்கு? யாப்பு தவருத போக்கு! புதுமைப் பொலிவு! எத்தனை அற்புதமான வாக்கு ஆம்! அன்று தமிழ்த்தாய் தன்னிகரற்றதொரு புதுமைப் புலவனைப் பெற்றுவிட்டாள்! "காளமேகம்" "காளமேகம்" எனப் புலவர் உலகம் அவனைப் போற்றியது. பதினைந்தாம் நூற்ருண்டில் தனக்குத் தானே உவமை சொல்லக்கூடிய மாபெரும் கவிஞனாக விளங்கிய காளமேகப் புலவன் ஆனைக்கா அகிலாண்டநாயகியின் ஞானக்குழந்தை, "திருவானைக்கா உலா" என்றதொரு அழகான நூலை எழுதிக் கொடுத்த மேதை; கிண்டலாகவும், குத்தலாகவும் பாட்டிசைத்து எதிராளியின் நெஞ்சைத் தூண்டிக் குறைகளைக் கண்டிக்கும் கவித்திறன் காளமேகத்திடமிருந்த அளவு வேறு எப்புலவனிடமும் இருந்ததாகத் தெரியவில்லை. பதினைந்தாம் நூற்ருண்டின் இலக்கிய வானில் காளமேகத்தின் கவிதையொளி முழுநிலவு போலப் பிரகாசிக்கிறது.

# தாயுமானவர்

அன்றொருநாள்; காலைநேரம்; மிகத் தொலைவிலுள்ள காஷ்மீர தேசத்து வியாபாரி ஒருவன் அழகழகான சால்வைகளைக் கொணர்ந்து அரண்மனையில் வியாபாரம் செய்ய வந்தான். பதினெட்டாம் நூற்றாண்டில் தென்னகம் காஷ்மீரச் சால்வைகளைக் காண்பது மிக்க அபூர்வம். பாரதத்தின் வட கோடியிலிருந்து தெற்கு முனையை அடுத்துள்ள திருச்சிராப்பள்ளி வரை ஒருவன் உயிரோடு வந்து சேருவதே ஒரு அதிருஷ்டம். நாட்டின் எப்பக்கமும் கலகமும், குழப்பமும் நிலவிய நேரம் அது. எனவே வணிகன் கூறிய விலையைக் கொடுத்து வாங்கத் தக்கப் பொருளாதார வசதி பொதுமக்களிடம் இல்லை. அரசனால் தான் நல்ல கிரயம் கொடுத்துத் துணிகளை வாங்க முடியும். அப்போது திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட தென்னாட்டு மன்னன் விஜயரெங்க சொக்கநாத நாயக்கர் ஆடையாபரணங்களில் அதிகப் பிரியமுள்ளவர். வியாபாரி கொணர்ந்ததில் மிக்க உயர்ந்ததாக உள்ள பத்துப் பதினைந்து சால்வைகளை வாங்கினார். அந்த சமயத்தில் அரசின் தலைமை அமைச்சர் தாயுமானார் உள்ளே புகுந்தார். மந்திரியிடம் அளவிலா மதிப்பு வைத்துள்ள நாயக்க மன்னர் தான் வாங்கியதில் சிறந்ததொரு சால்வையை எடுத்து அமைச்சருக்குப் போர்த்தி மகிழ்ந்தார். அரசரின் பெருந்தன்மைக்கு நன்றி கூறிவிட்டு வழக்கம்போல அலுவலகம் புகுந்தார். தனது அலுவல்களை முடித்து நண்பகல் உணவுக்கு வெளிவரும் நேரம். தாயுமானார் வெளிவருவது

கண்டு அவரோடு அரசர் பெருமானும் ஏதோ நாட்டு நடப்பு விஷயமாகப் பேசிக்கொண்டே வருகிறார். கோட்டை வாசல் படியருகே தோல்திரங்கி, கூன் விழுந்து பல ஆண்டுகளைத் துன்பத்திலும் வறுமையிலும் கழித்த மேனி சோர்ந்து சின்னதொரு கந்தையோடு கைநீட்டி நிற்கும் முதியதொரு பெண் உருவை, கிழத்தைக் காண அரசர் சகிக்க மாட்டாதவராய் முகம் சுளித்தார். அமைச்சர் ஒருகணம் தேங்கி நின்றவர், பதட்டமில்லாமல் தன் மேனிக்கு அழகூட்டும் அந்த விலையுயர்ந்த சால்வையை எடுத்து அப்பாட்டியின் நடுங்கும் உடலுக்குப் போர்த்தினார். போர்த்திவிட்டு அரசரிடம் விடைபெற்றுக் கொண்டு வீடேகினர். நாயக்கர் மனம் துணுக்குற்றது. விலையுயர்ந்த அந்தச் சால்வையை, அன்போடு உதவிய அருமை உணராமல் மந்திரி தனக்கு எதிரிலேயே அதைப் பிச்சைக்காரியிடம் கொடுப்பதா? அரசருக்கு அமைச்சர் மேல் அளவிலாச் சினமாக அது உருவெடுத்தது. அன்றுமாலை ஆனைக்கா அகிலாண்டநாயகிக்குத் திருவிழா. அரசருக்கு அமைச்சர் செய்கையால் ஏற்பட்ட மனக்கலக்கம் வேறு. அரசியும் உடன்வர அழைத்தாள். இருவருமாகத் திருவானைக்காத் திருக்கோயிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து கொண்டு அம்மன் கோயிலை அடைந்தனர்.

அரசர் வருகை கண்டு அர்ச்சகர்கள் கருவறைக்குள் புகுந்து அம்பிகையின் திருவுருவம் நன்றாய்த் தெரியும்படி சூடம் ஏற்றித் தீபாராதனை செய்தனர். அரச தம்பதிகள் தரிசிக்கும் போது என்ன அற்புதம்! நாயக்கமன்னர் தாயுமானருக்குக் கொடுத்த அதே சால்வை! தாயுமானர் பிச்சைக்காரக் கிழவிக்குப் போர்த்திய அதே காஷ்மீரத்துக் கம்பளம்! அம்பிகை மேனியை அணிசெய்யக்கண்டு பிரமித்துப் போனார் அரசர். ஏழைப் பிச்சைக்காரியிடம் கொடுத்ததற்காகச் சினந்து கொண்டதை எண்ணிப் புழுங்கினர். தான் மக்களினிடையே மகேஸ்வரியைக் காணக் கூடவில்லையே? எப்படியோ அகிலாண்ட தேவியே தங்களைச்

சோதிக்க அரண்மனை வாயிலில் தொண்டு கிழவியாக வந்து நின்றிருந்ததை அமைச்சரின் ஞானக் கண்கள் கண்டுபிடித்து விட்டனவே என நினைந்து உருகினர். 'நடமாடும் கோயில் நம்பர்க்கொன்று ஈயில் படமாடும் கோயில் பகவற்கதாமே' என்னும் வேதவாக்கு விளங்கியது. நாயக்க மன்னர் கோயிலை விட்டு அரண்மனைக்கு வந்ததும் அமைச்சரான தாயுமானரை அழைத்து வணங்கித் தன் சினத்தையும் அறியாமையையும் மன்னிக்கக் கோரினர். பிற்காலத்தில் அமைச்சுத் தொழிலை உதறிவிட்டுத் துறவியாகி "தாயுமான சுவாமிகள்" என்னும் திருப்பெயரோடு உலாவிய பெரியார் தான் அந்த விஜயரெங்கசொக்கநாத நாயக்கரின் அமைச்சர். தன்னிகரற்ற தத்துவ ஞானியான தாயுமானரின் கவிதைகள் உலகின் பல வேறு மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுத் தமிழ் மெய்ஞ்ஞானத்தின் சிறப்பை அகிலமெல்லாம் காண விளங்குகின்றன. தாயுமானர் ஆனைக்கா அகிலாண்ட நாயகியின் உபாசகர். அம்மையின் திருவருளால் மெய்ஞ்ஞானம் பெற்றவர். அம்பிகையைத் துதித்து பல பாடல்கள் இயற்றியுள்ளார். இன்றும் அவை நம் நாடெங்கும் பயிலப் பெறுவது யாவரும் அறிந்ததே.

# சைவ எல்லப்ப நாவலர்

அண்மையில் உள்ள திருச்சிராப்பள்ளி தலவரலாருகிய 'செவ்வந்திப் புராணம்' என்னும் இலக்கியச் சுவைமிக்க நூலாசிரியரான சைவ எல்லப்ப நாவலர், ஆனைக்கா அண்ணல் மீது மிக்க ஈடுபாடுள்ளவர் என்பது, திருவரங்கத்துப் பெரியாராகிய அஷ்டப் பிரபந்த ஆசிரியர் பிள்ளைப் பெருமாளைய்யங்காரையும் அவரையும் சம்பந்தப்படுத்திக் கூறும் வரலாற்ருலும் செவ்வந்திப் புராணத்தில் அப்புலவர் பெருமான் ஆனைக்காவுடையாரைக் குறித்துக் கூறும்—

"கனலுருவமாய் இருந்தால் மலர்க்கையின் மான்
பயந்தகலும், கங்கையாள்தன்
மனமுருகி வெம்பும், மற்றை மலைமானும் தளரும், என்றே
வடிவம் எல்லாம்
புனலுருவமானவனை அமிர்தகதிர் புனைந்தவனைப்
பொருந்தும் கோடித்
தினகரனை நிகர்த்தவனைத் திருவானைக் காவானைச்
சேவித்தானே".

"வெண்ணாவல் நிழலானே! அகிலாண்டநாயகியா மேனை
ஈன்ற
பெண்ணாவலுடன் அணைக்கும் பெருமானே! மாணிக்கப்
பிறங்கல் போலும்
கண்ணா! வல் அசுரர்புரம் எரித்தானே! பெருங்கருணை
வழியா நிற்கும்
கண்ணா வல் அணிந்த மிடற் றரனே! என்று
அடிபணிந்து களித்துப் போந்தார்"

என்னும் செய்யுட்களாலும் அறியக் கிடக்கிறது.

# கச்சியப்ப முனிவர்

18-ஆம் நூற்றூண்டின் பிற்பகுதியில்வாழ்ந்த கவிராட்சசன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற கச்சியப்ப முனிவர் முன் உள்ள தந்திவனப்புராணத்தினும் சிறந்ததாய் திருவானைக்காப் புராணம் செய்தளித்தார். தந்திவனப் புராணம் தருமை ஆதீனக் குரு முதல்வரான குருஞான சம்பந்த முனிவரின் குருவான கமலை ஞானப் பிரகாசரால் யாக்கப்பட்ட ஆனைக்கா வரலாற்றில் மிகப் பழமையானது. அது முழுவதும் தற்போது கிடைக்கவில்லை.

கச்சியப்ப முனிவர் திருவாவடுதுறை மடத்துத் துறவிகளில் ஒருவர். திராவிட மாபாடிய கர்த்தரான செந்தமிழ்ச் சிங்கம் சிவஞான முனிவரின் சீடர். அவர் பாடிய காவியச் சிறப்பு மிக்க காஞ்சி புராணத்தின் பிற்பகுதியை எழுதி நிறைவு செய்த பெருமைக்குரியவர். மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தன் உபாசனா மூருவாக ஏற்றுத் தனக்குச் செய்யுள் செய்யும்போது ஏற்படும் தடைகளை நீக்க, நினைத்துத் தோத்தரிக்கும் அளவில் புத்துணர்வு ஊட்டப் பெறும் தெய்வீகம் பெற்ற மகா புருஷர். அவர் திருவானைக்காப் புராணத்தை ஒரு சைவ சாத்திர நூலாகவே செய்துவிட்டார். அம்மைக்கு அருள் புரிந்த படலத்தும் ஜம்பு மாதவர்க்கு அருள்புரிந்த படலத்தும் சித்தாந்த சைவத்தின் தத்துவ விளக்கம் முழுவதையும் பாடியுள்ளார். தட்சிணா மூர்த்தித் தோத்திரமாகிய—

"மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர் தாள் நிழல் அடங்கும் உண்மையைக்
கைமலர்க் காட்சியில் கதுவ நல்கிய
செம்மலையல துளம் சிந்தியாதரோ!"

என்ற செய்யுள் சமயவாணர்கள் தம் கருத்தில் என்றென்றும் மறவாது போற்றும் ஒன்றுமல்லவா!

திருவானைக்காப்புராணம் சமய தத்துவவிளக்கம் தருவது மட்டுமல்லாது இலக்கியச் சுவை மிக்கதொரு நூலுமாகும். ஒரு தல புராணத்தில், பிற காவியங்களிலும் காணக் கிடைக்காத வருணனை அழகும், சொற்கட்டும் கவிராட்சச கச்சியப்ப முனிவரைப்போல வேறு எவரும் செய்துள்ளதாகத் தமிழிலக்கியத்தின் சரித்திரத்தில் கண்டதில்லை. உதாரணமாக "கட்டுக் கடங்காது ஐம்பொறிகளின் வழியே அலைகின்ற மனம், நல்லாசிரியனின் பால் பட்டதும் அவன் வழிப்படுத்தும் நெறிமுறையால் ஒழுங்குபட்டு ஒருமுகமாகிக் கல்விமேல் செல்வதுபோல, ஆடிப் புதுவெள்ளத்தில் – கட்டற்றுப் பாய்ந்துவரும் கால்வாய் நீர் உழவர் பெருமக்கள் மடைகோலித் தேக்கி நஞ்சையில் பாய்ச்சவும் விளைநிலங்களில் புகுந்திடுவதை ஒப்புநோக்கும் நாட்டுப் படலப் பாடல்:

"பொறிவழிப் புலன்கள் தோறும்
புகும் உளம் குரவன் நோக்கால்
நெறியுளி ஒழுக்கின் ஏகும்
நீதியின் உடைப்பு முற்றும்
எறிபறை யார்ப்ப மன்னர்
இடந்தொறும் ஈண்டிச் செய்யும்
செறி குலையகத்த வாகிச்
செல்லுவ செழுங்கால் நீத்தம்"

ஒரு பக்கத்தைத் திருமாலுக்கும் மற்றொரு பக்கத்தை அம்மைக்கும் அளித்துவிட்ட சிவபெருமானைப்போல் முதன முதலில் வெண்மையாக எழுந்த நெல் முளை நாளாவட்டத்தில் முழுதும் பசுமையடைந்தது என்றும், சீடனின் பக்குவம் தெரிந்து உபதேசித்து அவன் உள்ளத்து அழுக்கை அகற்றி ஞானமூட்டும் சற்குருவைப் போல, வயல்களில் பயிர்கள் இடையே முளைத்த களைகளை உழத்திகள் களைந்து எறிந்தனர் என்றும் நயம்பட உரைக்கும் செய்யுள்கள் தமிழிலக்கியத்தின் முடிமணியாகத் திகழ்வன என்பது மிகையாகாது. விரிவஞ்சி இத்துடன் விடுவோம்.

# பிள்ளை அவர்கள்

"மகா வித்துவான்" என்ற சிறப்புப் பெயர் தமிழில், தமிழகத்தில் திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களையே குறிக்கும். கம்பனிலும் அதிகமான கவிதைகள் பாடிய பெரும் புலவர் அவர். தன்னிகரற்ற பாவலர். திருச்சியில் பலகாலம் வாழ்ந்தவர். திருவானைக்கா அண்ணலிடமும், அகிலாண்டதேவியிடமும் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். ஒருநாள் வழக்கம்போல திருச்சியிலிருந்து கிளம்பி காவேரியைத் தாண்டி ஆனைக்கா ஆலயம் வந்தார். கோயிலின் ஐந்தாம் திருச்சுற்றைக் காணவும், அவர் மனக் கண்ணில் பண்டு ஒருநாள் தன்னைப் போன்ற தமிழ்ப் பெரும் புலவரான கற்பனைக் களஞ்சியம் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் அக்கினித்தலமான திருவண்ணுமலையைச் சுற்றி கிரிப்பிரதட்சணம் வரும்போதே பாடி முடித்த அருமையான நூல் 'சோண சைல மாலை' நினைவுக்கு வந்தது. ஆனைக்கா மலையல்லவாயினும், அதன் ஐந்தாம் திருச்சுற்றுத் திருமதில் திருவண்ணுமலை கிரித் திருச்சுற்றினும் சற்றே சிறியதுதான் எனினும் இறைவன் ஆசைப்பட்டுத் தானே முன்னின்று தனக்கெனக் கட்டிக்கொண்ட பெருமையை உடையது அல்லவா! அதை வலம் வரும்போது தானும் சிவப்பிரகாசர் போலவே அம்பிகைக்கு ஒரு மாலையைக் கவிதையால் தொடுத்துச் சாத்த எண்ணியது அவர் புலமை உள்ளம். அவ்வளவுதான்! தடையின்றி ஒவ்வொன்றுகப் பாடல்கள் மலர்ந்தன. திருச்சுற்று முடியவும் அகிலாண்டநாயகி மாலை முழுமை பெற்றது. மிக்க எளிமையும் இனிமையும் பொருந்திய அகிலாண்டநாயகி மாலை இன்றும் வாடாத மணமாலையாகத் தமிழ் அன்னை தன் தலையில் சூடி மகிழ இருக்கிறது. மாலை பாடிய மனம் அடங்காது அன்னையைக் குழவியாகக் கற்பனைக் கண்களால் கண்டு மகிழ்ந்த பிள்ளையவர்கள் அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழையும் பாடி உலகமாதாவின் திருவடிகளில் சூட்டி மகிழ்ந்தார்.

திருவானைக்கா அகிலாண்டநாயகி மாலையை இயற்றியருளிய மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், அதனுள் அம்பிகையைக் குறித்து; "தாயே! கோவை, அந்தாதி, கலம்பகம் முதலிய ஏற்கனவே பெற்றுள்ள உன் திருவடிக்கு எனது இம்மாலையும் அணி செய்யட்டும்!" எனக் குறிப்பதால் அண்மைக் காலம் வரை சிறு பிரபந்தங்கள் பல திருவானைக்கா அண்ணல், அம்பிகை இருவரையும் சிறப்பிப்பதாக வழங்கி வந்ததாகத் தெரிய வருகிறது. தற்போது அவற்றுள் ஏதும் கிடைத்திலது. அண்மைக் காலத்து வாழ்ந்த வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய யமக நூல் ஒன்றும், சுப்பையர் என்பார் இயற்றிய பதிற்றுப் பத்தந்தாதியும் உள்ளன. மேலும் வடமொழியில் கஜாரண்ய மகாத்மியம் என்னும் தலபுராணம் உள்ளது. ஆதிசங்கர பகவத்பாதர் அம்பிகை மீது பாடியுள்ள அக்ஷரமாலிகையைத் தவிர மிகப் பல நூல்கள் இருந்து வழக்கொழிந்து போனதாகத் தெரிகிறது. 'வல்லீ பரிணயம்' என்னும் நாடகம் வடமொழியில் இயற்றி, நடிக்கவும் பட்டதாக இவ்வூரைச் சிறப்பிக்கும் நாடக வரலாற்றுச் செய்தி குறிப்பிடத்தக்கது. ஜம்பு நாதாஷ்டகம் ஸ்ரீ வேங்கடேஸ்வர ஐயாவாள் செய்தது நாம் பயிலக் கிடைக்கிறது.

# பொதுச் செய்திகள்

திருவானைக்கா சங்க காலத்திலிருந்தே மிக்க புகழ் பெற்ற தலமாக விளங்கி வருகிறது. கஜாரண்யமாக இருந்ததை முதன்முதலில் கோயிலெடுத்து நகரமைத்த பெருந்தகை, இற்றைக்கு சுமார் 2500 வருடங்களுக்கு முன் தென்னாடு முழுவதும் ஒரு குடைக் கீழாண்ட கோச்செங்கட் சோழப் பெருமான் ஆவார். அவர் முதலாக பதினெட்டாம் நூற்றாண்டு வரைக் கோயில் திருப்பணி செய்த பெரியார்களைப் பற்றிக் குறிப்பிடும் திருவானைக்காத் திருப்பணி மாலை என்றதொரு நூல் இருப்பது பற்றி முன்னமேயே குறிப்பிட்டோம். அந்நூல் கூறியபடி செங்கண்ணன் செய்தவை திருக்கோயிலின் திருச்சாலகக் கண்டிகை, மண்டபம், கோபுரம், யானை புகாத வாயில், மாடவீதி, பதினெண் மடங்கள், எட்டுதிசை இடபக் கொடி மரங்கள் என்பனவாகும். அடுத்து விஜய பாலன் அகளங்க வளவன் இரண்டாம் பிரகார மதில், கோபுரம், மண்டபம் முதலியவற்றைக் கட்டினான். விக்ரம சோழன் மூன்றாம் திருச்சுற்று மதில், கோபுரம், மண்டபங்களை அமைத்தான். சக்ரவர்த்தித் திருமகனை இராமபிரானால் இராமதீர்த்தத் திருக்குளம், கரியமாலீசர் கோயில் முதலியன கட்டப்பட்டன. சுந்தர பாண்டியன் நாலாம் பிரகாரத்துக்குக் கோபுரத்தை அமைத்தான். சிவமுனி சித்தர் திருநீறிட்டான் திருமதிலான ஐந்தாம் திருச்சுற்று மதிலையும் கோபுரங்களையும் எடுத்தவராவார். அம்மன் கோயில் பிரசன்ன விநாயகர் கோயிலும் அகிலாண்ட ஈஸ்வரிக்குத் தாடங்கமும் ஆதிசங்கர பகவத்பாதர் செய்தவை. குலசேகர பாண்டியன் விண்ணேங்கு மண்டபம் கட்டியவனுவான். மதுரை வரகுண பாண்டியன் விடையாற்றி மண்டபம் எடுத்தான். திருநீற்றுச் சோழன் கோடைத் திருவிழா மண்டபமும், யாகசாலையும் அமைத்துக் கொடுத்தான். அழகனருள் முதலியப்பன் என்பான் நிலா எரிக்கும் மண்டபம், சிவலிங்கம் பிரதிட்டை கருவறைக் கோபுரக் கலசத்துக்குப் பொன்முலாம் பூசியது

முதலியவற்றை முடித்தான். வரிசைப் பெருமாளையன் நீராழி மண்டபமும் திருக்குளத் திருமாளிகைப் பத்தி மைய மண்டபமும் எடுத்தான். சொக்கப்பையன் வீரேஸ்வரத்துக்கு மேற்கிலுள்ள மண்டபம் கட்டினான். ஜம்புநாத செட்டி பூச மண்டபம், நாலுகால் மண்டபம் இவற்றைக் கட்டிக் கொடுத்தான். சுப்பிரமணிய மகா முனிவன் செழுங்கழுநீர் விநாயகர் கோயில் (சன்னதிக்கு முன் உள்ள பிள்ளையார்) கோயில் கட்டி முடித்தான். மாணிக்கவாசகன் கருங்கல் சிங்காசனம் செய்தளித்தான். தேவராயன் திருவளர் சோலையில் நந்தவனமும் மணிமண்டபமும் அமைத்துக் கொடுத்தான். அரங்க ஜெயதுங்கன் என்பான் அம்மன் கோயில் கம்பத்தடி உயர் மண்டபம் கட்டினான். பேரம்பலத் துறைவர் சைவமுனி என்பார் ஆயிரக்கால் மண்டபம் அமைத்தவர். செவ்வநதிநாதன் தாழைக்குடியில் மண்டபம் கட்டினான். மந்திரிப் பெருமாள் கட்டியது வெங்கங்குடி மண்டபம். கச்சியப்ப செட்டி நாயக்கர் காவேரிக் கரையில் பதினாறுகால் மண்டபம் சமைத்தான். கனகையன் என்னும் பிராமணன் கைலாச வாகன மண்டபம் கண்டனன். மேலும் வாணுதிராயன், நித்யானந்த நாராயண தீட்சதன், திருமலை நாயக்கன் முதலியோர் அணிமணிகளும் திருவிழா வாகனங்களும் செய்தளித்தார்கள். என அந்தத் திருப்பணிமாலை குறிப்பிடும்.

# சிற்பங்கள்

சிற்ப நுணுக்கங்கள் அகிலாண்டநாயகியின் திரு உருவுக்கு அடுத்தப்படியாக மிக்க சிறப்புற அமைந்துள்ள, இரண்டாம் திருச்சுற்றுத் தென் மேற்கு மூலையில் இருக்கும் வல்லபை கணபதியின படிமமாகும். உற்சவ மூர்த்திகள் இருக்கும் மண்டபத்துக் கொடுங்கைகள் மரத்தால் செய்யப்பட்டது போலத் தோன்றுமாறு ஆவுடையார்கோயில் பாணியில் அமைத்துள்ளது சிறப்பாகும். மூன்றும் திருச்சுற்றில் கீழ்ப்புறம் உள்ள நாலுகால் மண்டபம், நடமாடும் நங்கையர்

குறிசொல்லும் குறத்தி போன்ற அழகான சிற்பங்களைத் தாங்கியுள்ளதை காணலாம். உற்சவ நடராஜர் சன்னிதிக்குக் கீழ்ப்புறம் உள்ள பழமையான தட்சிணுமூர்த்தி உருவம் அழகானது. மேலும் ஆயிரக்கால் மண்டபமும், சுந்தர பாண்டியன் கோபுரமும் வனப்பு மிக்க படிவங்கள் பல நிறைந்தவை. அகிலாண்டநாயகி கோயிலின் கீழ்ப்புறம் கோயிலுக்கு வேண்டிய நெல்லைச் சேமித்து வைக்கப் பல நூற்றுண்டுகளுக்கு முன் அமைந்துள்ள நெற்களஞ்சியம் விஞ்ஞான ரீதியில், வைத்த தானியம் கெட்டுப் போகாதபடி நம் முன்னேர்கள் பாதுகாத்து வந்த பாங்கை இன்றும் உணர்த்திக் கொண்டுள்ளது.

மேலும் தற்காலக் கருங்கற் சிற்பத் திறமையைக் காட்ட வென்றே சுவாமி சன்னிதியில் மூன்றும் பிரகாரத்தில் உள்ள நான்கு பெரிய தூண்களும் அவற்றிலுள்ள சிற்பங்களும் உச்சியில் தொங்கும் கற்சங்கிலிகளும் அழகு செய்கின்றன.

## கல்வெட்டுக்கள்

இக்கோயில் முதல் திருச்சுற்று வாயிலின் இருபுறமும் இருக்கும் உலோகத்தாலமைந்த துவாரபாலக' திருவுருவங்கள் மிக்க எடுப்பானவை. அவற்றை அமைத்தவரின் பெயர் அடிபீடத்திலேயே குறித்துள்ளது; இஙங் கொளப்பாடி வளநாட்டுக் கருப்பூர் இளைய நயினுர் மகனுர் தெய்வங்கள் பெருமாள் என்பது அப்பணி புரிந்தவர் பெயராகும். இக்கோயிலின் உற்சவ விநாயகர் திருவுருவம் வங்கதேசத்துச் சிற்ப பாணியில் அமைந்துள்ளது என அதன் நுணுக்கம் தெரிந்த அறிஞர் ஒருவர் குறிப்பிடுகிறுர்.

வடக்குத் திருவீதியில் இராஜராஜேஸ்வரி கோயிலில் உள்ளதொரு சிவலிங்கம் சதாசிவமூர்த்தியின் முகங்களான, ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் எனும் ஐந்தையும் குறிக்கும் ஐம்முகச் சிவலிங்கமாக அமைந்

துள்ளது. நேபாளத்தில் உள்ள பசுபதிநாதர் திருவுருவம் இதுபோன்றதாகும். மற்றெங்கும் இதுபோன்ற சிவலிங்க அமைப்பு இல்லை என்பர். அக்கோயில் எதிரே மிகப் பெரிய அழகிய, ஆனால் சேதப்படுத்தப்பட்டுக் கிடக்கும் விநாயகர்சிலை காணத் தகுந்தது. அன்னிய மதத்தார் படையெடுப்பில் சிதைந்தது அதுவெனக் கூறப்படுகிறது. மேலும் கீழ்ப்புறம் ஜம்புதீர்த்தத்தின் கீழ்க்கரைப் படிக்கட்டின் தென்புறச் சுவற்றில் படைப்புச் சிற்பமாக விளங்கும் போர்க் கோலங் கொண்ட முருகனின் அழகு ரசிக்கத் தக்கது. கலையுணர்வில்லாத எவரோ அதையும் சிதைத்துள்ளார்கள். அம்மன் கோயில் சன்னிதிப் பிள்ளையார் கருவறையில் ஆதி சங்கரர் திருவுருவம் உள்ளது. மேலும் அம்மன் கோயில் முதல் திருச்சுற்றில் தென்மேல் கோடியில் உள்ள ஐமுக விநாயகர் சிற்பம் தமிழகத்தில் மிக்க அரிய ஒன்றாகும். மேலும் அக்கோயிலுக்குள் நுழைவாயில் வடபுறத் தூணில் செதுக்கப்பட்டுள்ள சிவபெருமானின் மூர்த்தி பேதங்களில் ஒன்றான ஏகபாத மூர்த்தித் திருவுருவம் மிக அழகியது. ஐந்தாம் திருச்சுற்றில் மேல்புறம் தனிக்கோயிலில் உள்ள வீரபத்திரர் திருவுருவம் கம்பீரமான தோற்றம் உடையது, ஆண்மையின் கம்பீரம் தோன்ற விளங்குவது. இதுபோலப் பார்த்தால், சங்க காலந்தொட்டு தற்காலம் வரை வளர்ந்து வரும் தமிழகத்தின் சிற்பக் கலையின் பரிணாம விநோதம் முழுவதையும் இக்கோயிலுள் காணலாகும்.

## வரலாற்றுச் சிறப்பு

இன்று பிரபலமாக விளங்கும் மாரியம்மன் கோயில் உள்ள தலம் சமயபுரம், பண்டு ஹொய்சாள அரசனுன வீர சோமேஸ்வரனின் ஆட்சித் தலைநகராக விளங்கியது. அக் காலத்து அதன் பெயர் "விக்ரமபுரம்" என்பதாம். சமய புரத்தை அடுத்துள்ள இன்றைய போஜராஜா சோயிலான பொய்சளேஸ்வரர் கோயிலை வீரசோமேஸ்வரன் கட்டி முடித்தான். ஆனைக்காவுக்குத் தெற்கே காவேரிக் கரையில் உள்ள இன்றைய வீரேஸ்வரம் என்னும் கிராமம் அவன் பெயர் கொண்டு 'வீரசோமேஸ்வரம்' எனப் பண்டு விளங்கியது. மேலும் வயலூரை அடுத்த இன்றைய சோமரசம்பேட்டை என்னும் சிற்றூர் சோமேஸ்வரன் பேட்டை என முன்னுள் விளங்கியது. மேலும் திருவாசி என மருவி வழங்கும் பாடல் பெற்ற தலமான திருப்பாச்சிலாச்சிராமம் திருக்கோயில் வீரசோமேஸ்வரன் திருப்பணியைப் பெற்றது. இவை எல்லாம் சுவாமி கோயில் மூன்ரும் திருச்சுற்றிலும் அம்மன் கோயில் இரண்டாம் திருச் சுற்றிலும் உள்ள கல்வெட்டுக்களால் தெரியவரும் வரலாற்று உண்மைகள். மேலும் தமிழகத்தில் ஹொய்சாளர் ஆட்சி பற்றிய பல செய்திகள் திருவானைக்கா கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றன. இக்கோயிலின் 300க்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் அரசாங்கத்தால் படி எடுக்கப்பட்டுள்ளன. மேலும் எடுக்கப்பட வேண்டிய பல உளன.

"என்னை நிலைசெய் கல்யாணிச் சாளுவத் திருமலைராயன் மந்தர புயனும் கோப்பயன் உதவு மகிபதி விதாணராமன் வாக்கினுல் குபேரனுக்கினுன்" என்று காளமேகப் புலவரால் சிறப்பிக்கப்படும் சாளுவ மன்னனுகிய கோப்பராஜன் மகன் திருமலைராயன் அம்பிகைக்குத் திருவாபரணம் அளித்த செய்தி அம்மன் கோயில் கல்வெட்டால் தெரியவருகிறது.

கவி காளமேகத்தின் காலம் பற்றிய மயக்கம் தெளிய வரலாற்று ஆசிரியர்களுக்கு இது மிக உதவுகிறது.

வடக்குத் திருவீதியிலுள்ள சங்கராச்சாரியார் மடத்தின் மேலைச் சுவர் கல்வெட்டொன்று திரிபுவனச் சக்ரவர்த்தி கோன் நேர் இன்மை கொண்டான் காலத்தில் அவுருடையான் சோழகன் என்பான் அங்கு நாற்பத் தெண்ணயிரவர் மடம் அமைத்து அன்னதானம் செய்தது தெரியவருகிறது. திருப்பைஞ்ஞீலி திருக்கோயில் திருப்பணியும் அவனுடையதே யாகும் என அறிகிறோம்.

சமயபுரத்துக்கு அருகில் உள்ள இன்றைய வெங்கங்குடி பண்டு 'வெண்கோன்குடி' எனப்பட்டு, அதிலிருந்து நிலங்கள் ஆனைக்காவுடையாருக்குத் தானமாகச் சோழ மன்னனை வாலக காமயர் என்னும் அலக்க ராஜனால் அளிக்கப்பட்டது. இது கி. பி. 1482இல் ஆகும்.

திருவானைக்காத் திருத்தலத்தின் நவதீர்த்தங்களில் ஒன்றான சந்திர புட்கரணி திருவரங்கத்தில் உள்ளதாகும்.

'கிளைபுணைத் தீட்டு' என்னும் தூய தமிழ்ச் சொல் 'ஜாமீன்' என்னும் சொல்லுக்குப் பதிலாக முன்னாள் வழங்கியது எனத் திருவானைக்காக் கல்வெட்டுக்கள் தெரிவிக்க அப்பழைய புதுத் தமிழ்ச் சொல்லை அறிய நாம் மனம் மிக மகிழ்கிறோம். திரிபுவனச் சக்ரவர்த்தி இராஜ ராஜ தேவரின் 22-ஆம் ஆண்டுக் கல்வெட்டினால் இது விளங்குகிறது.

கி. பி. 1584 இல் திருவானைக்காத் திருக்கோயில் ஆதிக்கம் பாசுபத மடத்துத் தலைவரான சந்திரசேகர குருவுக்கு உரிமையாகி இருந்தது. வடக்குவீதியில் பாசுபத சமயத் துறவிகளுக்கானதொரு பெருமடம் இருந்தது, என்னும் கல்வெட்டின் உண்மையை விளக்குவது போல, இன்றும் அவ்வீதியில் பல இடங்களில் புதிதாக வீடு கட்ட மண்ணைத் தோண்டும் போது சிவலிங்கப் படிமங்கள் கிடைப்பதைக் காண்கிறோம்.

மேலும் திருவரங்கத்துத் திருக்கோயில் பற்றியதொரு நூல் 'கோயிலொழுகு' என்னும் பெயரிலுள்ளது. அதன் மூலம் ஆதியில் இவ்விரண்டு கோயில்களுக்கும் உள்ள தொடர்பும், பின்னாள், சைவ வைணவக் காழ்ப்பால் ஏற்பட்ட பூசலும் தெரியவருகிறது. மேலும் வைணவ நூலான குருபரம்பரர்ப் பிரபாவத்திலும் சில குறிப்புகள் கிடைக்கின்றன. திருவரங்கத்தையும், திருவானைக்காவையும் எல்லைக் கோடிட்டுக் காட்டப் பிற்காலத்தில் கட்டப்பட்ட தொரு மதில் சுவரின் இடிபாடுகள் இன்றும் காணக் கிடக்கின்றன.

ஆனைக்கா அண்ணலின் நித்திய பூசைக்கான புதுமலர் வழங்கும் பெரிய நந்தவனமொன்று முன்பு திருவளர்ச் சோலை என்னும் பெயரில் அண்மையில் உள்ள சிற்றூரில் இருந்த தாகத் தெரியவருகிறது.

அண்மையில் சுமார் ரூ. 3,26,000/–யே (அரசாங்க மோகினியுட்பட) வருடவருமானமாகச் சுருங்கிவிட இத்திருக் கோயிலுக்கு ஆதியில் ஏராளமான நிலபுலன்கள், தோப்புகள், ஆபரணங்கள் இருந்ததாக அறிகிறோம். செப்புப்பட்டயங் களையும், கல்வெட்டுகளையும் பார்த்தால் பற்பல கிராமங்கள் இக் கோயிலுக்குத் தேவதானமாக விடப்பட்ட விபரம் தெரியவருகிறது.

# பிற்காலச் சரித்திரக் குறிப்பு

அக்காலத்து, ஆனைக்காவில் நிலம் அளக்கும் நான்கு அடி நீளமுள்ள அளவுகோலுக்கு 'சிவநாமத்திரேயம்' என்னும் பிரத்தியேகமான பெயர் உண்டு. இக்கோயிலின் திருவிழா மண்டபம் எடுத்த சதாசிவ வாஜபேய யாஜீ தீட்சதராயர் என்பார் "காவைப் பிரபந்தங்கள்" செய்துள்ள செய்தி கல்எழுத்துகளால் அறியினும் அவற்றுள் ஒன்றையும் தற்காலம் நாம் பயிலக்கிடைக்காதது நம் துர்அதிருஷ்டமே ஆகும்.

சோழ பாண்டியர்களும் பின்னர் ஹொய்சாளர்களும் ஆண்டபின் நாயக்க மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டு வாழ்ந்த ஆனைக்கா 18-ஆம் நூற்றாண்டில் நடந்த சரித்திரப் பிரசித்திபெற்ற கர்னாடகப் போரில் பிரஞ்சுக்காரர்களின் கோட்டையாக விளங்கியது. 1752-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திருச்சிக் கோட்டையினின்றும் பின்வாங்கி வந்த பிரஞ்சுப் படையின் புகலிடமாகத் திருவானைக்கா விளங்கியது. சந்தா சாகிப் சீரங்கத்தில் இருந்தார். இரண்டு நாட்கள் கோயிலையே கோட்டையாகக் கொண்டு தங்கி இருந்து பின் சமயபுரம் கோயிலுக்குப் புறப்பட்டதாகச் சரித்திரம் பேசுகிறது. தாம் தங்கியிருந்த இரண்டு நாட்களுக்குள் ஆனைக்கா அண்ணலின் திருக்கோயில் பற்றியதொரு நூல் பிரெஞ்சு மொழியில் எழுதி வைத்துள்ளார். அப்பிரஞ்சுப் படைத் தளபதி இவ்வூர் பற்றிய பல பல அரிய செய்திகளை அதில் பெய்திருக்கிறார். பிரான்சு நாட்டு பாரிஸ் வரலாற்றுக் கருவூலத்தில் அக்குறிப்புப் புத்தகம் கையெழுத்துப் பிரதியாகவே இன்றும் உள்ளது.

சங்க காலத்துக் கோச்செங்கண்ணன் துவக்கிய ஆனைக்காத் திருக்கோயில் திருப்பணியைச் சென்ற நூற்றாண்டின் இறுதியில் தொடர்ந்து நடத்திக் குடமுழுக்கும் செய்த நாட்டுக்கோட்டை நகரத்தார்களை நாம் குறித்துப்

பாராட்டாது விடுவது பாவமாகும். கோயிலை முழுதும் புதுக்கிய பெருமை அவர்களையே சாரும். சிவநேயச் செல்வர்களாகிய அவர்கள் திருப்பணியால் ஆனைக்காத் திருக்கோயில் பழமை வலிவோடு புதுப் பொலிவும் பெற்று விளங்குகிறது.

பின் 1963-இல் உயர்திரு. T M. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் திருப்பணிக் குழுவொன்று அமைக்கப் பெற்று திருப்பணி முடிந்து காமகோடி பீடம சங்கராச் சாரியார் புதுப் பெரியவர்கள் முன்னிலையில் பெருஞ் சாந்தி எனும் குடமுழுக்கு விழா 1970-ஞ மே-மீ 5-ஆம்தேதி அன்று நடைபெற்றது.

மேலும் திருநீற்றான் திருமதில் திருப்பணியையும் முடிக்கத் துரிதமாக வேலைகள் நடந்து வருகின்றன.

இன்னும் புதிதாக அம்மன் கோயில் முதல் சுற்றில் ஆதிசங்கர பகவத் பாதாச்சாரியார் அவர்கள் தேவி தோத்திரமாக இயற்றியருளிய ஒப்பற்ற வடமொழி நூலாகிய "சௌந்தர்ய லகரி", கவிதாமணி திரு.அ.வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களால் தமிழ்ச் செய்யுள் வடிவில் மொழி பெயர்க்கப்பட்டு வடமொழி மூலத்தோடு சிலாசாசனம் பெற்று பக்தகோடிகள் பயின்று பயன்பெற சலவைக்கல்லின் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## நித்திய நைமித்தியங்கள்

நாள் தோறும் 4 கால பூசை இக்கோயிலில் நடைபெறுகிறது. அவை முறையே காலைசந்தி, உச்சிக் காலம் சாயரட்சை, அர்த்தயாமம் எனப்படும். இவை நான்கிலும் உச்சிக்கால பூசை சிறப்பானது. அம்பிகை சன்னதியிலிருந்து சுவாமி கோயில் பூசகர், அம்பிகையைப் போல புடவை உடுத்தி, முடி சூடி, கையில் பூசைத் திரவியங்களோடும் மேளதாளத்தோடும் கிளம்பி சுவாமி கோயில் மூன்றும் திருச்சுற்று வழியே வலம் வந்து சன்னிதியில் தன்னை அகிலாண்ட நாயகியாகப் பாவித்துக்கொண்டு அபிஷேக ஆராதனைகளைச் செய்து முடித்து, அத்துடன் கோ பூசை செய்து பின் அம்மன் கோயில் சேர்வது நாள்தோறும் நடைமுறையில் உள்ளது. ஆனைக்கா அண்ணலை என்றென்றும் அம்பிகை பூசித்து வருவதாகக் கூறும் தலவரலாற்றின் தொடர்புடையது இந்நிகழ்ச்சி. நித்திய நைமித்தியங்களைக் கோயில் பூசகர்களான வடக்குத் திருவீதியில் குடியிருக்கும் ஆதிசைவ அந்தணர்களே செய்துவருகிறார்கள். இவ்வூர்க் கோயில் குருக்கள்மார் "பண்டிதர்" என்னும் பிரத்தியேகமான குடிப்பெயர் பெற்றுள்ளவர்கள்.

திருவிழாக்களுள் மிகப் பெரியதான பிரமோத்ஸவம், மாசி மாதம் மிருகசீரிடத்தில் கொடியேற்றப்பட்டு பங்குனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பஞ்சப்பிரகாரம் முடிய 40 நாட்கள் நடைபெறுகிறது. மாசி ரேவதியில் திருத்தேர் விழா நடைபெறும். இக்கோயிலின் முக்கியமான பெருந்திருவிழா பஞ்சப்பிரகாரமாகும். அன்று இரவு சுவாமி அம்பிகையாகவும், அம்பிகை அண்ணலைப்போலவும் மாறுபட்ட திருக்கோலத்தோடு திருக்கோயிலின் ஐந்து திருச்சுற்றுக்களிலும் வலம் வருவார்கள். பிரமனின் சாபம் நீக்கி அவனுக்கு மீண்டும் அப்பதவியை அளித்தருள ஈசன்

இத்திருக்கோலத்தில் வந்ததாக மரபு. இப்புராணக்கதை முன்னரே பேசப்பட்டது. இது தவிர வைகாசி மாதம் வசந்தத்திருவிழா 10 நாட்களும், ஆடியில் பூரம் 10 நாட்களும், தைப்பூசம் 10 நாட்களும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அம்பிகைக்கு ஆடிப் பூரத் திருவிழாவோடு நவராத்திரி 10 தினங்களிலும் மிக்க கோலாகலமாகத் திருவிழா நடைபெறுகிறது. நவராத்திரியில் பற்பல இசை அரங்குகளும், இலக்கியச் சொற்பொழிவுகளும் இதையொட்டி நிகழ்வது வழக்கம். ஆனியிலும் தையிலும் ஆடவல்லபெருமானுக்குத் திருவிழா சிறப்பாக நடைபெறுவது காணலாம்.

மாசி சுவாதியில் இத்தல வரலாற்ருேடு சம்பந்தப்பட்ட கோச்செங்கட் சோழ நாயனரின் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அறுபத்துமூவரில் ஒருவராகவும், உத்ஸவ மண்டபத்தில் தனியே அமைந்துள்ள புதுக்கோயிலிலும் செங்கண்ணனின் திருவுருவம் இக்கோயிலுள் பூசிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஐம்பூதங்களில் ஒன்ருன "அப்பு" க்ஷேத்திரம் எனவும், யோக முறையில் சுவாதிஷ்டானத் தலமெனவும், பதினெண் சித்தர்களில் மச்சமுனி என்பவரின் அருள்நோக்குப் பெற்றது எனவும் சிறப்பிக்கப்படும். ஆனைக்கா ஆலய நிர்வாகம் ஐவர் கொண்ட தர்மகர்த்தாக் குழுவும், நிர்வாக அலுவலர் ஒருவருமாகக் கவனித்து வர தமிழ்நாடு இந்து அறநிலையத் துறையின் பார்வையில் நடந்து வருகிறது. இதுவரை இக்கோயில் நிர்வாகத்தினைத் திறம்பட நடத்தி வந்த அறங்காவலர்கள், அலுவலர்கள் வரிசை அடுத்து குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலயவருமானக் குறிப்பும் உள்ளது.

தென்னட்டுத் திருக்கோயில்களில் மிக்க சிறப்புடையவற்றுள் ஒன்ருன திருவானைக்காத் திருக்கோயிலை எல்லோரும் வந்து தரிசித்து எல்லாப் பேறும் பெற்றுய்ய அன்பர்களை அழைக்கிறேம் வருக!

## தேவாரமும் தனிப்பாடல்களும்

*இத்தலத்துக்குத் தேவார ஆசிரியர் மூவரும் பாடிய 7 பதிகங்கள் உண்டு. அவைகளுள்*

### திருஞானசம்பந்தர் அருளியவை

மழையார் மிடரு மழுவா ளுடையாய்
உழையார் கரவா வுமையாள் கணவா
விழவா ரும்வெண் ணு வலின்மே வியஎம்
அழகா வெனுமா யிழையா ளவளே. 1

வெண்ணு வலமர்ந் துறைவே தியனைக்
கண்ணார் கமழ்கா ழியர்தந் தலைவன்
பண்ணே டிவைபா டியபத் தும்வல்லார்
விண்ணே ரவரேத் தவிரும் புவரே. 2

வானைக் காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக் காவிலின்மொழித் தேவி பாகமாயினன்
ஆனைக் காவிலண்ணலை யபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதுமேத மில்லையே. 3

ஊழியூழி வையகத் துயிர்கடோற்று வாநெடும்
ஆழியானுங் காண்கிலா ஆனைக்காவி லண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச்சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே. 4

மண்ணது வுண்டரி மலரோன் காணு
வெண்ணு வல்விரும்பு மயேந் திரரும்
கண்ணது வோங்கிய கயிலை யாரும்
அண்ண லாரூராதி யானைக் காவே. 5

ஏன மாலய னவர்காண் பரியார்
கான மார்கயிலை நன்மயேந் திரரும்
ஆன வாரூராதி யானைக் காவை
ஞான சம்பந் தன்தமிழ் சொல்லுமே. 6

# திருநாவுக்கரசர் அருளியவை

## திருக்குறுந்தொகை

கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்
தேனைக் காவியுண் ணார்சில தெண்ணர்கள்
ஆனைக் காவிலெம் மானை யணைகிலார்
ஊனைக் காவி யுழிதர்வ ருமரே. 1

ஓதமா கடல் சூழிலங் கைக்கிறை
கீதங் கின்னரம் பாடக் கெழுவினன்
பாதம் வாங்கிப் பரிந்தருள் செய்தங்கோர்
ஆதி யாயிடும் ஆனைக்கா வண்ணலே. 2

## திருத்தாண்டகம்

எத்தாய ரெத்தந்தை யெச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடா மேவர் நல்லார்
செத்தால் வந்துதவுவா ரொருவ ரில்லைச்
சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா வென்றன்
அத்தாவுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே. 3

ஊனாகி யுயிராகி யதனு ணின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேது மறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே. 4

முன்னானைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்னானை யாப்பண்ணி யேறி னானைச்
சாதற் கரியானைத் தாதை தன்னை
என்னானைக் கன்றினை யென்னீசன் றன்னை
எறிநீர்த் திரையு கலுங்கா விரிசூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச் சென்றாடி னேனே. 5

மருந்தானை மந்திரிப் பார்மனத் துளானை
வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தென்னுள்ளத்
திருந்தானை யிறப்பிலியைப் பிறப்பி லானை
இமையவர்தம் பெருமானை யுமையா ளஞ்சக்
கருந்தான மதகளிற்றி னுரிபோர்த் தானைக்
கனமழுவாட் படையானைப் பலிகொண்டூரூர்
திரிந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச் சென்றாடி னேனே. 6

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியவை

மறைக ளாயின நான்கு மற்றுள பொருள்களு மெல்லாந்
துறையுந் தோத்திரத் திறையுந் தொன்மையு நன்மையு மாய
அறையும் பூம்புன லானைக் காவுடை யாதியை நாளும்
இறைவ னென்றடி சேர்வா ரெம்மையு மாளுடையாரே. 1

*தார மாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுந்தும்
நீரி னின்றடி போற்றி நின்மலா கொள்ளென வாங்கே
ஆரங் கொண்ட வெம்மானைக் காவுடை யாதியை நாளும்
ஈர முள்ளவர் நாளும் எம்மையு மாளுடை யாரே. 2

ஆழியாற் கருளானைக் காவுடையாதி பொன்னடியின்
நீழலே சரணாக நின்றருள்கூர நினைந்து
வாழவல்ல வன்றொண்டின் வண்டமிழ்மாலை வல்லார் போய்
ஏழுமா பிறப்பற்று எம்மையு மாளுடையாரே. 3

*சோழன் காவிரியில் நீராடும் போது நழுவி விழுந்த முத்துமாலையை அவன் வேண்டிக்கொண்டபடியே பெருமான் திருமஞ்சனக் குடத்தின் மூலமாக ஏற்றுக்கொண்ட செய்தி இச்செய்யுளில் கூறப்பெற்றுள்ளது.

## ஐயடிகள் காடவர்கோன் இயற்றிய க்ஷேத்திரத் திருவெண்பா

குழீஇயிருந்த சுற்றங் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த வங்கங்க ளெல்லாந்—தழீஇயிருந்து
மென்னுளைக் காவா விதுதகா வென்னுமுன்
தென்னுளைக் காவடைநீ சென்று.

## அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்

அம்புலி நீரைச் சூடிய
செஞ்சடை மீதிற் ருவிய
ஐந்தலை நாகப் பூஷண னருள்வோனே

யன்புட னுவிற் பாவது
சந்தத மோதித் தாடனி
லங்கையி னுனற் பூசனை புரியாமல்

அம்பணி யாரப் பூண்முலை
வஞ்சியர் மாயச் சாயலில்
வண்டுழ லோதித் தாழ்குழ லிருசாதின்

மண்டிய நீலப் பார்வையில்
வெண்டுகி லாடைச் சேர்வையின்
மங்கிய வேளழப் பாவ்ய னழிவேனோ

கொம்பனை நீலக் கோமள
வம்புய மாலைப் பூஷணி
குண்டலி யாலப் போசனி யபிராமி

கொஞ்சிய வானைச் சானவி
சங்கரி வேதப் பார்வதி
குன்றருள் பாலிப் பேரிழை யருள்பாலா

செம்பவ ளாயக் கூரிதழ்
மின்குற மானைப் பூண்முலை
திண்புய மார்பிற் பூரண மணவோனே

செந்தமிழ் வாணப் பாவலர்
சங்கிசை யாழைப் பாடிய
தென்றிரு வானைக் காவுறை பெருமானே.

## காளமேகப் புலவர் பாடிய தனிப்பாடல்கள்

சீரங்கத் தாருந் திருவானைக் காவாரும்
போரங்கமாகப் பொருவதேன்?—ஓரங்கள்
வேண்டா மிதென்ன விவரந் தெரியாதோ?
ஆண்டானுந் தாதனுமா னல். 1

கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர்—சொல்வீரால்
மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென் முன்னுள், 2

## தாயுமான சுவாமிகள் பாடிய பாடல்

வட்ட மிட்டொளிர் பிராண வாயுவெனு
நிகள மோடுகம னஞ்செயும்
மனமெனும் பெரிய மத்த யானையையென்
வசமடக்கி டின்மும் மண்டலத்
திட்ட முற்றவள ராச யோகமிவன்
யோக மென்றறிஞர் புகழவே
ஏழையே னுலகில் நீடு வாழ்வன் இனி
இங்கிதற் கும்அனு மானமோ.

பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்ய மானசுப யோகமும்
பார காவிய கவித்வ நான்மறை
பராயணஞ் செய்மதி யூகமும்
அட்ட சித்தி நலன்ப ருக்கருள
விருது கட்டிய பொன் அன்னமே
அண்டகோடி புகழ் காவை வாழும் அகி
லாண்ட நாயகியென் அம்மையே.

## சிவநாமப் பல்தொடை வெண்பா

போற்று திருஆனைக்கா மேவும் அகிலாண்ட
நாயகிசேர் ஞானப்புகழ்ச் சம்பு நாயகா

## தனிநூல்கள்

*திருவானைக்காப் புராணம். இந்நூல் ஸ்ரீ கச்சியப்ப முனிவரால் இயற்றப்பட்டது. 21 படலங்களை உடையது. சொற்சுவை பொருட்சுவை பொருந்தியது.*

## விநாயகர்

நிலம்போற்றும் பனிக்கிரண நிலாவணிந்த நாயகனுர் நிருதர் வாழுஞ்
சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய பூசனைகள் சால வாற்றிப்
புலம்போற்று மெய்யடியார் விநாயக னென் றியம்புபதப் பொருளை நாட்டி
வலம்போற்று மணியிரத மூர்த்தமழ விளங்களிற்றை வணக்கஞ் செய்வாம்.

## ஆனைக்கா அண்ணல்

மணிபூத்த நறும்பொகுட்டு மலர்த்தவிசு
நாகணையு மாகத் தும்பர்ப்
பணிபூத்த கயிலாய நெடுஞ்சிலம்பு
மொருமூவர் பணிந்து வைக
வணிபூத்த வவருளமுந் திருவானைக்
காவுமினி தமர்ந்தெல் லோர்க்கும்
பிணிபூத்த மலந்துரக்குஞ் சம்புநா
யகர்மலர்த்தாள் பேணி வாழ்வாம்.

## அகிலாண்டநாயகி

எண்ணிறந்த தாயர்வயிற் றிருந்துபிறந்
திடுந்துயர மெனைத்தும் நீங்க
மண்ணிறந்து புனலிறந்து வயங்கியசெந்
தீயிறந்து வளியி னோடு
விண்ணிறந்து பெருங்கருணைத் தாயாகித்
தன தகட்டின் விரவ வைத்துக்
கண்ணிறந்த கவின் காட்டும் அகிலாண்ட
நாயகியைக் கருத்துள் வைப்பாம்.

## முருகப்பெருமான்

இருமுது குரவர் நாப்ப ணிளமையோ டிருந்து சேயென்
றொருவரும் பெயரும் வேறே யொருவருஞ் சாமி யாகாக்
குருபர னிறைஞ்ச வுண்மை கொடுத்தொரு சாமியென்னும்
பொருவரும் பெயரும் பூண்ட புனிதனைப் புகழ்ந்து வாழ்வாம்.

*திருவானைக்காப் பதிற்றுப்பத்தந்தாதி. இது திரு. K. V. சுப்பையர் அவர்களால் இயற்றப்பெற்றது. 100 செய்யுட்களை உடையது.*

சிந்திக்க வரமருளுந் திருவானைக்
காவடிக டினமு நெஞ்சே
வந்திக்க மலர்க்கரமும் வாழ்த்தபசுந்
தமிழ்வாக்கும் வணங்க மெய்யும்
பந்திக்கத் தலையன்பும் பரிந்தளித்தும்
அவன்மலர்த்தாட் பரவா தந்தோ
நிந்திக்க வுடற்குழைக்கு நின்செய்கை
விழற்கிறைத்த நீர தறே 1

அமுதேச ஞான தலவாச தும்பி
யகிலாண்ட வல்லி யயன்மால்
குமுதேசன் பானு முனிகோத மன்வண்
குறுமாத வத்தன் முதலாஞ்
சமுதாய மான தவரால் வணங்கு
தலைவாமி குத்த வவரன்
பிமியேனுமின்றி யிறுமாந் திருக்கு
மெளியேனு முய்ய வருவளே. 2

# இந்துமத அறநிலையத்துறை ஆணைப்படி இத்திருக்கோயிலில் பணியாற்றிய நிர்வாக அதிகாரிகள் பெயரும், காலமும்.

| வ. எண். | நிர்வாக அதிகாரிகளின் பெயர். | காலம் முதல் | வரை. |
|---|---|---|---|
| 1. | திரு. சி. தியாகராஜ முதலியார் | 4- 2-46 | 30- 5-46 |
| 2. | ,, டி. ஆர். பெரியநாயகம், பி. ஏ., எல். டி., | 1- 7-46 | 23- 6-47 |
| 3. | ,, பி. சுப்பையா பிள்ளை, | 24- 6-47 | 23- 8-50 |
| | மானேஜிங் டிரஸ்டி இன்சார்ஜ் | 24- 8-50 | 5- 9-50 |
| 4. | ,, ஏ. ஸ்ரீனிவாசன் | 6- 9-50 | 3-10-50 |
| 5. | ,, பி. சுப்பையா பிள்ளை | 14-10-50 | |
| 6. | ,, ஏ. ஸ்ரீனிவாசன் | 15-10-50 | 22-10-50 |
| 7. | ,, அர்ஜுனன், (இன்ஸ்பெக்டர் இன்சார்ஜ்) | 23-10-50 | 7-11-50 |
| 8. | ,, ஆர். திருவேங்கடசாமி, (இன்ஸ்பெக்டர் இன்சார்ஜ்) | 8-11-50 | 24-12-50 |
| 9. | ,, எஸ். ஜெகதீச அய்யர் | 25-12-50 | 6- 4-51 |
| 10. | ,, ஆர். திருவேங்கடசாமி, (இன்ஸ்பெக்டர் இன்சார்ஜ்) | 7- 4-51 | 25- 4-51 |
| 11. | ,, எஸ். ஜெகதீச அய்யர் | 26- 4-51 | 1- 8-51 |
| 12. | ,, ரெங்கராஜா, பி. ஏ., | 2- 8-51 | 8- 2-53 |
| 13. | ,, ஆர். ராமையா நாயுடு, பி. ஏ., | 9- 2-53 | 18- 8-53 |
| 14. | ,, எல். முத்துகிருஷ்ணன், பி. ஏ., | 11- 9-53 | 28-10-53 |
| 15. | ,, ஆர். ராமையா நாயுடு, பி. ஏ., | 29-10-53 | 1- 6-55 |
| 16. | ,, எஸ். ராமலிங்க நாயுடு, பி. ஏ., பி. எல்., | 2- 6-55 | 15- 6-55 |
| 17. | ,, காப்டன் எஸ். சாமிநாதன் | 16- 6-55 | 12-12-56 |
| 18. | ,, வி. கருப்பண்ண பிள்ளை, | 13-12-56 | 28- 5-60 |
| 19. | ,, எம். பரமசிவம், எம். ஏ., எல். எல். பி. | 28- 5-60 | 24- 9-61 |

| வ. எண். | | நிர்வாக அதிகாரிகளின் பெயர். | காலம் முதல் | வரை |
|---|---|---|---|---|
| 20. | ,, | எஸ். தங்கவேல் பிள்ளை | 25 - 9 - 61 | 18 - [illegible] 62 |
| 21. | ,, | எஸ். ரெங்கசாமி பிள்ளை | 19 - 9 - 62 | 10 - 8 - 63 |
| 22. | ,, | எஸ். மகராஜன், பி. ஏ., பி. டி., | 11 - 8 - 63 | 26 - 3 - 64 |
| 23. | ,, | எஸ். தசரத ராமச்சந்திரன், பி. ஏ., | 27 - 3 - 64 | 27 [illegible] |
| 24. | ,, | V. M. சிதம்பரம் பிள்ளை | 28 - 7 - 64 | 20 [illegible] |
| 25. | ,, | K. சிதம்பரம். பி. ஏ., | 21 - 8 - 65 | 14 [illegible] |
| 26. | ,, | V. கருப்பண்ண பிள்ளை | 15 - 12 - 66 | 11 [illegible] |
| 27. | ,, | S. இரத்தினம், பி. ஏ., பி. டி., | 12 - 1 - 67 | 8 [illegible] |
| 28. | ,, | V. முருகன் | 9 - 9 - 69 | 4 [illegible] |
| 29. | ,, | R. திருவேங்கடசாமி | 5 - 12 - 69 | 7 [illegible] |
| 30. | ,, | S. மகராஜன், பி. ஏ., பி. டி., | 8 - 8 - 70 | 11 [illegible] |
| 31. | ,, | S. பாலசுப்பிரமணியம், பி. எஸ்ஸி., பி. எல். | 12 - 7 - 73 | 18 [illegible] |
| 32. | ,, | S. சுப்பையா | 19 - 7 - 73 | 15 [illegible] |
| 33. | ,, | S. மகராஜன், பி. ஏ., பி. டி., | 16 - 9 - 73 | 7 [illegible] |
| 34. | ,, | A. A. வெங்கடாசலம், பி. ஏ., | 8 - 6 - 74 | 30 [illegible] |
| 35. | ,, | S. மகராஜன், பி. ஏ., பி. டி., | 1 - 10 - 74 | 4 - [illegible] |
| 36. | ,, | D. புருஷோத்தம ரெட்டியார் | 5 - 4 - 75 | |

நஞ்சை, புஞ்சை நிலங்கள் தென்னந்தோப் [illegible] மூலமாக குத்தகை வருமானங்களும், மே [illegible] அலவன்ஸ், அர்ச்சனை காணிக்கை, உண் [illegible] வருமானங்களும் சேர்ந்து ஆண்டு ஒன் [illegible] 3 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது.